தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்
# பேப்பர்பாய்
www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY

Advertise Your Business
MAKE YOUR BUSINESS KNOWN TO ALL

சென்னை மலர்: 01 இதழ்: 200 03.03.2026 செவ்வாய்க்கிழமை | Chennai | Volume: 01 | Issue: 200 | Tuesday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

செவ்வாய்க்கிழமை
(3-03-2026)
விசுவாவசு ஆண்டு, மாசி-19
பிறை: வளர்பிறை
திதி
பௌர்ணமி மாலை 5.52 வரை பிறகு பிரதமை.
நட்சத்திரம்:
மகம் காலை 8.07 வரை பிறகு பூரம்.
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
பிற்பகல் 3.00 – 4.30 மணி
எமகண்டம்
காலை 9.00 – 10.30 மணி
சூலம் – வடக்கு.
நல்ல நேரம் :
காலை 8-9 மணி.
மாலை 5-6 மணி

| | |
|---|---|
| மேஷம் | லாபம் |
| ரிஷபம் | சிறப்பு |
| மிதுனம் | வரவு |
| கடகம் | நன்மை |
| சிம்மம் | பாராட்டு |
| கன்னி | வெற்றி |
| துலாம் | ஆதரவு |
| விருச்சிகம் | ஆக்கம் |
| தனுசு | பரிசு |
| மகரம் | பணிவு |
| கும்பம் | பண்பு |
| மீனம் | நிறைவு |

# ஈரான் போர் 4 வாரங்கள் நீடிக்கலாம்: ட்ரம்ப்

**வாஷிங்டன், மார்ச்.3:**

ஈரான் - அமெரிக்கா இடையே நிலவி வரும் போர்ச் சூழல் குறித்துப் பேசிய அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், இந்த ராணுவ நடவடிக்கை இன்னும் நான்கு வாரங்களுக்கு நீடிக்கலாம் என்று அறிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு பேட்டியளித்த அவர், ஈரானின் பரப்பளவு மற்றும் தற்போதைய ராணுவ நிலவரத்தைக் கணக்கில் கொண்டு இந்த காலக்கெடுவைத் திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல்கள் தற்காலிகமானவை அல்ல என்றும், அமெரிக்காவின் அனைத்து இலக்குகளும் எட்டப்படும் வரை போரின் வேகம் குறையாது என்றும் அவர் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

இதுவரை நடைபெற்ற தாக்குதல்களில் ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி உட்பட 48 முக்கியத் தலைவர்கள் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவித்த ட்ரம்ப், இது தாங்கள் எதிர்பார்த்ததை விடப் மிகப்பெரிய வெற்றி என்று கூறியுள்ளார்.


அதே நேரத்தில், இந்தப் போரில் மூன்று அமெரிக்க வீரர்கள் உயிரிழந்துள்ளதை அவர் அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளார். அவர்கள் மிகச்சிறந்த வீரர்கள் என்று புகழாரம் சூட்டிய ட்ரம்ப், போர்க்களத்தில் இத்தகைய உயிரிழப்புகள் துரதிர்ஷ்டவசமானவை எனினும் தவிர்க்க முடியாதவை என்று குறிப்பிட்டுள்ளார்.

பேச்சுவார்த்தைக்கான வாய்ப்புகள் குறித்துக் கேட்கப்பட்டபோது, "அவர்கள் இப்போது பேச விரும்புகிறார்கள், ஆனால் கடந்த வாரமே பேசியிருக்க வேண்டும்" என்று பதிலளித்த அவர், தற்போதைக்குத் தாக்குதல்கள் தொடரும் என்று உறுதிபட தெரிவித்தார்.

அணு ஆயுதம் மற்றும் நீண்ட தூர ஏவுகணைகளைக் கொண்டுள்ள ஈரான், நாகரிக உலகிற்கே பெரும் அச்சுறுத்தல் என்பதால் இந்தத் தாக்குதல் அவசியமானது என்று அவர் தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், கத்தார் மற்றும் ஜோர்டான் போன்ற நாடுகளின் தலைவர்களுடன் தான் தொடர்ந்து பேசி வருவதாகவும், அமெரிக்கப் படைகளின் அடுத்தகட்ட நகர்வுகள் குறித்து விரைவில் நாட்டு மக்களிடம் உரையாற்ற உள்ளதாகவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஈரானின் ராணுவ மற்றும் பொருளாதார மையங்களைக் குறிவைத்துத் தொடர்ந்து துல்லியமான தாக்குதல்கள் நடத்தப்படும் என்பதால், வளைகுடா நாடுகளில் நிலவும் பதற்றம் இன்னும் சில வாரங்களுக்குத் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



முன்னதாக, தனது ட்ரூத் சோஷியல் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், "9 ஈரானிய கடற்படை கப்பல்களை நாங்கள் அழித்து மூழ்கடித்துவிட்டதாக எனக்குத் தகவல் கிடைத்தது, அவற்றில் சில ஒப்பீட்டளவில் பெரியவை மற்றும் முக்கியமானவை. மீதமுள்ளவற்றை நாங்கள் தேடி வருகிறோம்.

அவை விரைவில் கடலின் அடிப்பகுதியில் மிதக்கும். ஒரு வித்தியாசமான தாக்குதலில், அவர்களின் கடற்படை தலைமையகத்தை நாங்கள் பெருமளவில் அழித்து விட்டோம். அதைத் தவிர, அவர்களின் கடற்படை மிகச் சிறப்பாக செயல்படுகிறது" என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, அமெரிக்கா - இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி கொல்லப்பட்ட பின்னர் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவுகளில், "உலக வரலாற்றின் தீய மனிதர்களில் ஈரான் மதத் தலைவர் அயத்துல்லா அலி காமேனியும் ஒருவர். அவர் உயிரிழந்து விட்டார். இதன் மூலம் ஈரான் மக்களுக்கு முழுமையான நீதி கிடைத்திருக்கிறது. காமேனியால் பாதிக்கப்பட்ட நாடுகள் மற்றும் அமெரிக்க மக்களுக்கும் நீதி கிடைத்திருக்கிறது.

இந்த நேரத்தில் ஈரானிய மக்கள் ஆட்சி நிர்வாகத்தை தங்கள் கையில் எடுத்துக் கொள்ள வேண்டுகிறேன். ஈரானின் ஐஆர்ஜிசி, ராணுவம், காவல் துறையை சேர்ந்த வீரர்கள் போரிட விரும்பவில்லை. அவர்கள் ஈரானின் தேசப்பற்றாளர்களுடன் இணைவார்கள் என உறுதியாக நம்புகிறேன். ஈரானின் தீய சக்திகள் மீது அமெரிக்காவின் துல்லிய தாக்குதல் தொடரும். இந்த தாக்குதல் ஒரு வாரம் வரை நீடிக்கலாம். ஒரு வாரத்தையும் தாண்டி செல்ல வாய்ப்பு இருக்கிறது.

எங்களது குறிக்கோள் நிறைவேறும்வரை தாக்குதல் தொடரும். இதன்மூலம் மத்திய கிழக்கு முழுவதும் அமைதி திரும்பும். மத்திய கிழக்கு மட்டுமன்றி உலகம் முழுவதுமே அமைதி திரும்பும். பதிலடி கொடுக்கப்படும் என்று ஈரானின் இப்போதைய ஆட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். முந்தைய தாக்குதல் களைவிட அதிதீவிரமாக தாக்குதல் நடத்துவோம் என்கின்றனர்.

அவ்வாறு பதில் தாக்குதல் நடத்தாமல் இருப்பது ஈரான் ஆட்சியாளர்களுக்கு நல்லது. ஒருவேளை அவர்கள் தாக்குதல் நடத்தினால் நாங்களும் தாக்குதல் நடத்துவோம். எங்களது தாக்குதல், உலகம் இதுவரை காணாத வகையில் அதிதீவிர தாக்குதலாக இருக்கும். இதை ஈரான் ஆட்சியாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்" என்று ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

## ஈரானுக்கு எதிராக 3 நாடுகள் கூட்டறிக்கை!

ஈரானுக்கு எதிராக அமெரிக்காவுடன் இணைந்து களம்காண தயாராகயிருப்பதாக பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் கூட்டறிக்கையை வெளியிட்டுள்ளன.

நட்பு நாடுகளின் நலன்களை பாதுகாக்க ஈரானின் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை ஏவப் பயன்படும் தளங்களை அழிக்க தற்காப்புத் தாக்குதல்களை நடத்த தயார் என அந்த நாடுகள் அறிவித்துள்ளன. ஈரானின் பழிவாங்கும் ராணுவ நடவடிக்கைகளை முறியடிக்க அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளுடன் ஒருங்கிணைந்து செயல்படத் தயாராக இருப்பதாக பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் தெரிவித்துள்ளன.

தொடர்ந்து, மத்திய கிழக்கில் போர்ப் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

மூன்று நாடுகளும் தங்கள் சொந்த நலன்களையும் தங்கள் நட்பு நாடுகளின் நலன்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளன.

ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை ஏவுவதற்கான, ஈரானின் திறனைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கைகள் இதில் அடங்கும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர்ப் பதற்றம் அதிகரித்து வரும் சூழலில், அமெரிக்கா மற்றும் நட்பு நாடுகளுடன் இணைந்து பணியாற்ற பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி ஒப்புக் கொண்டதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்கா-இஸ்ரேல் கூட்டுத் தாக்குதல்: ஈரானில் இதுவரை 555 பேர் உயிரிழப்பு!

ஈரானை குறிவைத்து அமெரிக்கா-இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் இஸ்லாமிய குடியரசில் இதுவரை குறைந்தது 555 பேர் கொல்லப்பட்டதாக ஈரானிய ரெட் கிரசண்ட் சொசைட்டி தெரிவித்துள்ளது. மேலும் போரில் இதுவரை 131 நகரங்கள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

ஈரான்மீது சனிக்கிழமை அமெரிக்கா - இஸ்ரேல் தொடங்கிய கூட்டுத்தாக்குதல் இன்று மூன்றாவது நாளாக தொடர்ந்து வருகிறது. சனிக்கிழமை ஈரான் உச்சத் தலைவர் கமேனி கொல்லப்பட்டதற்கு பதிலடியாக தொடர் தாக்குதலில் ஈரான் ஈடுபட்டு வருகிறது. அதன் அண்டை நாடுகளில் உள்ள அமெரிக்கத் தளங்களிலும் தாக்குதலைத் தொடர்ந்து வருகிறது. இச்சூழலில் பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் பிரிட்டன் போன்றவை அமெரிக்காவிற்கு ஆதரவு அளித்துள்ளன. இந்தியாவும் வளைகுடா நாடுகள் மீதான தாக்குதலுக்காக ஈரானுக்கு கண்டனம் தெரிவித்துள்ளது.

வளைகுடா நாடுகளும் ஈரானுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன. இருப்பினும் ஈரான் தனது தொடர் தாக்குதலை நிகழ்த்தி வருகிறது.

## போர் எதிரொலி: பங்குச்சந்தைகள் கடும் வீழ்ச்சி



**மும்பை, மார்ச்.3:**

மும்பை பங்குச்சந்தையான சென்செக்ஸ் 1,100 புள்ளிகள் வரை சரிந்து 80,277 புள்ளிகளில் வர்த்தகம் ஆகிறது. தேசிய பங்குச்சந்தையான நிப்டி 300 புள்ளிகள் வரை சரிந்து 24,890 புள்ளிகளில் வர்த்தகம் தொடங்கி உள்ளது.

வளைகுடா நாடுகளில் போர் பதற்றம் காரணமாக பங்குச்சந்தைகள் கடும் சரிவுடன் வர்த்தகம் தொடங்குகிறது. மேற்காசிய நாடுகளில் ஏற்பட்டுள்ள போர் பதற்றம் காராணமாக கச்சா எண்ணெய் விலை 12 சதவீதம் அதிகரித்துள்ளது.

அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு 24 காசுகள் குறைந்து ரூ.91.32-ல் வர்த்தகம் ஆகிறது.

## 7 லட்சம் பிஎப் கணக்கில் உள்ள பணம் தானாகவே வரவு வைக்க முடிவு

**சென்னை, மார்ச்.3:**

குறைந்த அளவு இருப்பு கொண்ட 7 லட்சம் இபிஎப்ஓ கணக்குகளில் உள்ள தொகையை, எவ்வித விண்ணப்பமும் இன்றி நேரடியாக சந்தாதாரரின் வங்கி கணக்கிற்கு தானாகவே திருப்பி அனுப்ப மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இபிஎப்ஓ எனப்படும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி கணக்கில் பல ஆண்டுகளாக உரிமை கோரப்படாமல் இருக்கும் சிறு தொகையை திரும்ப வழங்கும் முக்கிய நடவடிக்கையை மத்திய தொழிலாளர் நல அமைச்சகம் மேற்கொண்டுள்ளது.

ஆயிரம் ரூபாய்க்கு குறைவாக இருப்பு வைத்துக் கொண்டு நீண்ட காலமாக செயல்பாடு இல்லாத 7.16 லட்சம் கணக்குகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த கணக்குகளில் உள்ள தொகையை சம்பந்தப்பட்ட ஆதார் கணக்குடன் இணைக்கப்பட்ட வங்கி கணக்கில் தானாகவே வரவு வைக்கும் பணியை தொடங்கியுள்ளது.

சாந்தாரார்கள் உயிரிழந்து இருந்தால் அவர்களின் வாரிசுகள் அல்லது நாமினிகளுக்கு இந்த தொகை வரவு வைக்கப்பட்டது. பொதுவாக ஒரு பிஎப் கணக்கிற்கு 36 மாதங்கள் பங்களிப்பு வரவில்லை என்றால், அது செயல் இழந்த கணக்கு என்று கருதப்படும்

## இந்தியாவில் பெட்ரோல் - டீசல் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு இல்லை: அதிகாரிகள் விளக்கம்

**ஈரான், மார்ச்.3:**

ஈரானின் அணு ஆயுத திட்டங்களை கடுமையாக எதிர்த்து வரும் அமெரிக்கா, இது தொடர்பாக ஒப்பந்தத்தை எட்டுவதற்கு அந்த நாட்டை வற்புறுத்தியது. ஆனால் இந்த பேச்சுவார்த்தையில் தீர்வு ஏற்படாத நிலையில், நேற்று முன்தினம் இஸ்ரேலுடன் இணைந்து ஈரான் மீது திடீரென போர் தொடுத் தது அமெரிக்கா. ஏவுகணைகள், டிரோன்கள் மூலம் இரு நாட்டு படைகளும் கூட்டாக நடத் திய தாக்குதலில் ஈரான் தலைநகர் டெஹ்ரான் உள்பட நாடு முழுவதும் முக்கிய நகரங்கள் பெருத்த சேதத்தை சந்தித்தன. போர் விமானங்கள் குண்டு வீசியதில் டெஹ்ரான் குலுங்கியது. அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்திய இந்த தாக்குதல்களில் முதல் நாளிலேயே ஈரானின் உச்சபட்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி (வயது 86) கொல்லப்பட்டார்.

அயதுல்லா அலி காமேனி மரணத்தால் அதிர்ச்சியில் உறைந்துள்ள ஈரான் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு கடுமையான பதிலடி கொடுக்கப் படும் என சபதம் செய்துள்ளது. இதற்கிடையே, இஸ்ரேல்-அமெரிக்கத் தாக்குதலுக்கு பதிலடியாகவும், ஈரான் தலைமை மதகுரு கமேனி கொல்லப்பட்டதற்குப் பழிவாங்கும் வகையிலும், உலகில் கச்சா எண்ணெய் ஏற்றுமதிக்கு அதிகம் பயன்படுத்தப்படும் கடல் பகுதிகளில் ஒன்றான ஹோர்முஸ் நீரிணையை ஈரான் நேற்று முன் தினம் மூடியுள்ளது.

இந்தியா தனக்குத் தேவையான 88 சதவீத கச்சா எண்ணெய், 60 சதவீத இயற்கை எரிவாயுவை சவூதி அரேபியா, கத்தார், ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட வளைகுடா நாடுகளில் இருந்து கப்பல்கள் மூலம் இந்த நீரிணை வழியாகவே இறக்குமதி செய்து வருகிறது. இந்த நீரிணையை ஈரான் மூடிவிட்ட போதிலும், இந்தியாவில் தற்போதைக்கு பெட்ரோல்-டீசல், எரிவாயு தட்டுப்பாடு ஏற்படாது என்று மத்திய அரசு அதிகாரிகள் கூறியுள்ளனர். ஏனெனில் இந்தியாவிடம் ஏற்கெனேவே 10 நாள்களுக்குத் தேவையான பெட்ரோல் , டீசல், எரிவாயு இருப்பு உள்ளது. இதேபோல் அவசர காலத்துக்கு பயன்படுத்துவதற்காக சேமித்து வைக்கப்பட்டுள்ள பெட்ரோல், டீசல், எரிவாயு ஆகியவை மேலும் 5 முதல் 7 நாள்கள் வரை பயன்படுத்த முடியும்..இதேபோல், ஹோர்முஸ் நீரிணை ஈரானால் மூடப்பட்டிருப்பது அதிக காலம் நீடிக்காது எனக் கூறப்படுகிறது. அப்படி நீடிக்கும்பட்சத்தில், வளைகுடா நாடுகளுக்கு மாற்றாக ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய்யை இந்தியா மீண்டும் இறக்குமதி செய்யும் எனவும் அதிகாரிகள் வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டது.

## பிளஸ்-2 பொதுத்தேர்வு தொடக்கம்; 8.25 லட்சம் பேர் எழுதுகிறார்கள்

**சென்னை, மார்ச்.3:**

நடப்பாண்டில் தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித்துறையின் பாடத்திட்டங்களை பின்பற்றும் பிளஸ்-2 வகுப்புக்கான பொதுத்தேர்வு இன்று முதல் தொடங்குகிறது. தமிழ்நாடு முழுவதும் உள்ள 7,545 பள்ளிகளில் இருந்து 7 லட்சத்து 99 ஆயிரத்து 692 மாணவ-மாணவிகள் இந்தத் தேர்வை எழுத உள்ளனர். இதுதவிர, தனித்தேர்வர்களாக 27 ஆயிரத்து 783 பேர் எழுதுகின்றனர். அந்த வகையில் மொத்தம் 8 லட்சத்து 27 ஆயிரத்து 475 பேர் எழுத உள்ளனர். மேலும், சிறைத்தேர்வர்களாக 281 பேரும் எழுத உள்ளனர்.

முதல் தேர்வாக தமிழ் மற்றும் இதர மொழிப்பாடங்களுக்கான தேர்வு நடைபெறுகிறது. இதனைத் தொடர்ந்து 5-ந்தேதி (வியாழக்கிழமை) ஆங்கிலத் தேர்வும், அதன்பிறகு ஒவ்வொரு பாடங்களுக்கான தேர்வுகள் குறிப்பிட்ட இடைவெளியில் நடைபெற உள்ளன.

பொதுத்தேர்வுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் அரசு தேர்வுத்துறை தீவிரமாக மேற்கொண்டுள்ளது. தேர்வை சிறப்பாக நடத்தி முடிக்க பல்வேறு திட்டமிடல்களையும் செய்துள்ளது. அதன்படி, தேர்வறை



கண்காணிப்பாளர்களாக 44 ஆயிரத்து 624 பேரும், தேர்வுக் கண்காணிப்பு படையாக 4 ஆயிரத்து 540 பேரும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று அரசு தேர்வுத்துறை அறிவித்துள்ளது. மாற்றுத்திறனாளி மாணவ-மாணவிகளுக்கான சொல்வதை எழுதுபவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதற்காக 7 ஆயிரத்து 465 பேர் சொல்வதை எழுதுபவர்களை கேட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2ம் தேதி தொடங்கும் பிளஸ்-2 மாணவ-மாணவிகளுக்கான பொதுத்தேர்வு வருகிற 26-ந்தேதி வரை நடைபெறும். இந்தத் தேர்வுக்கு மாணவ-மாணவிகள் ஆர்வமுடன் தயாராகி வருகின்றனர். இதற்கான தேர்வு முடிவு மே 8-ந்தேதி வெளியாகும் என ஏற்கனவே பொதுத்தேர்வு அட்டவணை வெளியிடப்பட்டபோது தெரிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

Follow our WhatsApp Channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel

## மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் மாசி மண்டலத்திருவிழா



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர்திருக்கோயில்மாசி மண்டலத்திருவிழா காலை-சுவாமி, அம்பாள்தங்கரிஷபம்,வெள்ளிரிஷபம்,மாசிமகம் தீர்த்தம்,விழா நிறைவு ஒழியாப் பனித்தடம் கண் நீர் சொரிய வந்து, உன் அடிக்கே பொழியாப் புது மலர் இட்டு நிற்பார்க்கு, உன் பொழி கருணை விழியால் சுரப்ப, அலர்ந்த செம்தாமரை வீடு ஒன்றவே அழியாப் பதம் தருவாய், மதுராபுரி அம்பிகையே!- குலசேகர பாண்டியன் அருளிய மதுராபுரி அம்பிகை மாலை சொக்கே நின் தாளே துணை

## மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு. க.ஸ்டாலின் அவர்களின் 73 –வது பிறந்தநாள் விழா





**திருவண்ணாமலை, மார்ச் 03:**

திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கீழ்பென்னாத்தூர் நகர செயலாளர் சி. கே. அன்பு அவர்கள் கீழ்பென்னாத்தூரில் அமைந்துள்ள அகல் மையத்திற்கு மதியம்,இரவு உணவுகளை மாணவர்களுக்கு வழங்கினார். உடன் கழகத் தோழர்கள் அகல் மையத்திலுள்ள தாளாளர், மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டு கேக் வெட்டி கொண்டாடினார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**


## ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாமம், பகவத் கீதை பாராயணம்





கோயம்புத்தூர்ஸ்ரீவாசவி கன்னிகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் மாசி மாதம் வெள்ளிக்கிழமையை முன்னிட்டு விஷ்ணு சகஸ்ரநாமம், பகவத் கீதை பாராயணம் செய்தனர். ஆர்ய வைஸ்ய பெண்கள் அனைவரும் வாசவி அம்மன் வேண்டி அருள் பெற்றனர். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## ஆஞ்சநேயருக்கு வெண்ணை காப்பு



காரைக்கால் மாவட்டம் கோட்டுச்சேரியில் கோயில் கொண்டுள்ள அருள்மிகு வரதராஜபெருமாள் கோயிலில் எழுந்தருளியுள்ள இரட்டை ஆஞ்சநேயர் ஸ்வாமிகள் வெண்ணை காப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.பக்தர்கட்கு தீர்த்தம் சடாரி துளசி செந்தூரம் மற்றும் இதர பிரசாதங்கள் வழங்கப்பட்டன ,

**தகவல் ஸ்ரீகாந்.K, கோட்டுச்சேரி**

# விநாயக் தாமோதர் சாவர்க்கர் அவர்களின் நினைவு தினம்




**சென்னை, மார்ச் 03:**

நம் புனிதமான பாரத தேசத்தை விட்டு வெள்ளையர்களை வெளியேற்ற வேண்டும் என்று தீவிரமாக செயல்பட்டு போராடிய மாபெரும் சுதந்திரப் போராட்ட வீரரும், இந்துத்துவா கொள்கையை முன்னிறுத்தி நம் இந்தியாவை இந்து தேசமாக அறிவிக்க வேண்டும் என்று போராடியவரும், இந்தியாவின் முதல் இந்து அமைப்பான அகில பாரத இந்து மகாசபாவின் முதல் தேசிய தலைவருமான வீர சாவர்க்கர் என்று அழைக்கப்படும் விநாயக் தாமோதர் சாவர்க்கர் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று சென்னை ஆவடியில் அமைந்துள்ள சந்த் மஹாசபாவின் மாநில அலுவலகமான மாளவியா பவனில் அவருக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டு புஷ்பாஞ்சலி செய்யப்பட்டது.

இதில் சந்த் மஹாசபாவின் தேசிய செயலாளரும், மாநில தலைவருமான சுவாமி ஸ்ரீராம் சித்ரகுப்த ஜி மகாராஜ் அவர்களுடன் மாநில நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு வீரவணக்கம் செலுத்தினோம்.

என்றும் ஆன்மீகப் பணியில் தீபம் பா சண்முகம் மாநில பொதுச் செயலாளர் சந்த் மஹாசபா

# மதுரையில் பழனி சுவாமிகள் குருபூஜை பூப்பல்லக்கு பக்தர்கள் திரண்டனர்

**மதுரை, மார்ச் 3 :**

பழனி அருகே கணக்கம் பட்டியில் வாழ்ந்த மகா சற்குரு பகவான் பழனி சுவாமிகள் மதுரை வில்லாபுரம் பகுதியில் முதன் முதலாக மதுரை ஞானசபை என்ற அமைப்பை நிறுவினார். இங்கு தினசரி வருகை தந்து அருள்பாலித்ததோடு தனது அருள் நிறைந்த இடமாக மதுரை ஞானசபையை மாற்றி அமைத்தார். இங்கு மகா ஸ்ரீ சற்குரு பகவான் பழனிசுவாமி களின் 12-ம் ஆண்டு குருபூஜை விழா மூன்று நாட்கள் நடைபெற்றது. பொங்கல் பூஜையுடன் தொடங்கி முதல் நாளான காலை யாகசாலை பூஜை யுடன் குருபூஜை தொடங்கி யது. முன்னதாக 12-ம் ஆண்டு குருபூஜை என்பதால் மகா சற்குரு பகவானுக்கு விபூதி, நெய், சந்தனம், மஞ்சள் பொடி, பால், பன்னீர், திரவியம் உள்ளிட்ட 12 அபி ஷேகங்கள் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து அலங்காரம் சிறப்பு செய்யப்பட்டு தீபாராதனை நடைபெற்றது. மாலை பக்தர்கள் சரண கோஷம் முழங்க மகா ஸ்ரீ சற்குரு பகவான் சிறப்பு அலங்காரத்தில் பூப்பல்லக்கில் எழுந்தருளி 2-ம் நாள் நிகழ்ச்சியாக காலையில் குருபூஜை சிறப்பு அபிஷேகம் தீபாராதனை நடைபெற்றது.





அதனைத் தொடர்ந்து மாலையில் கொங்கு மண்டலம் பவளக்கொடி கும்மி கலைக்குழு சார்பில் வள்ளி கும்மி நடனம் நடைபெ றுகிறது. 3-ம் நாள் நிகழ்ச்சியாக காலையில் சற்குரு மகா பகவானுக்கு புண்ணிய தீர்த்தங்களால் சங்காபிஷேகம் நடைபெற்றது. சிறப்பு அன்னதானம் நடைபெற்றது இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சற்குரு பழனி சுவாமியை வழிபாடு செய்தனர்.

# பிப்ரவரி மாத சாதனை: சென்னை மெட்ரோவில் 96.40 லட்சம் பேர் பயணம்


**சென்னை, மார்ச் 03:**

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் சார்பில் வெளியிடப்பட்டுள்ளஅறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

2026 பிப்ரவரி மாதத்தில் 96.40 லட்சம் பயணிகள் சென்னை மெட்ரோ ரெயில்களில் பயணம் செய்துள்ளனர்

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், சென்னையில் உள்ள மக்களுக்கும், மெட்ரோ இரயில் பயணிகளுக்கும் போக்குவரத்து வசதியை அளித்து வருவதோடு நம்பக தன்மையான பாதுகாப்பான வசதியை வழங்கி வருகிறது. அந்த வகையில் 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் 96,40,993 பயணிகள் மெட்ரோ ரெயில்களில் பயணித்துள்ளதாக மெட்ரோ ரெயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அதிகபட்சமாக 20.02.2026 அன்று 3,99,503 பயணிகள் மெட்ரோ ரெயில்களில் பயணம் செய்துள்ளனர்.



2026, பிப்ரவரி மாதத்தில் மட்டும் சிங்கார சென்னை அட்டையை (தேசிய பொது இயக்க அட்டை) பயன்படுத்தி 49,11,328 பயணிகள், பயண அட்டைகளை (Travel Card Ticketing System) பயன்படுத்தி 38,121 பயணிகள், க்யூஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டு முறையைப் பயன்படுத்தி 46,91,544 பயணிகள் (Single journey Paper QR /Token 19,10,265; Online QR 1,26,618; Static QR 2,11,188; Whatsapp - 4,51,491; Paytm 3,27,534; ONDC 11,47,636; PhonePe 2,70,088; CMRL Mobile App 64,649; Chennai One App 1,59,134; Event QR - 22,941) பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், Digital SVP, க்யூஆர் குறியீடு (OR Code) பயணச்சீட்டு, Whatsapp - (+91 83000 86000), Paytm App, PhonePe மற்றும் சிங்கார சென்னை அட்டை போன்ற பயணச்சீட்டுகளை பயன்படுத்தி மெட்ரோ ரெயில்களில் பயணிப்பவர்களுக்கு 20% கட்டணத் தள்ளுபடியை வழங்குகிறது.

மெட்ரோ ரெயில் நிலையங்களில் உள்ள பயணச்சீட்டு கவுண்டர்களில் வாங்கப்படும் ஒற்றைப் பயணத்துக்கான காகித QR பயணச்சீட்டுகளுக்கு (Single Journey Paper QR tickets) இந்தத் தள்ளுபடி கிடையாது.

மெட்ரோ ரெயில்கள் மற்றும் மெட்ரோ ரெயில் நிலையங்களை பராமரிப்பதில் மிகுந்த ஒத்துழைப்பு நல்கிவரும் அனைத்து பயணிகளுக்கும் சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றி.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தமிழக முதல்வரின் 73-வது பிறந்தநாள் விழா



**சென்னை, மார்ச் 03:**

அண்ணா அறிவாலயத்தில் மாண்புமிகு.தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் 73 வது பிறந்தநாள் வாழ்த்து மாண்புமிகு துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சரை நேரில் சென்று பிறந்தநாள் வாழ்த்துகளை தெரிவித்தார். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# ஈரான் உச்ச தலைவர் படுகொலை மனித நேய மக்கள் கட்சி ஆர்பாட்டம்




**சென்னை, மார்ச் 03:**

சென்னை அடுத்த தாம்பரத்தில் மனித நேய மக்கள் கட்சி சார்பில் ஈரான் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனியை படுகொலை செய்த அமெரிக்கா மற்றும் இஸ்ரேலை கண்டித்து மனித நேய மக்கள் கட்சியினர் மெழுகு வார்த்தி ஏந்து பேராணியாக சென்றனர். இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மனித மக்கள் கட்சி மாநில துணை பொது செயலாளர் யாக்கூப் தலைமை தாங்கினார்

தாம்பரம் ஜ௵ம் ஆ பள்ளிவாசலில் இருந்து, பாரதி திடல் வரை பேரணியாக வந்த 500க்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் மெழுகுவர்த்தி ஏந்தி கண்டன ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் அமெரிக்காவிற்கு எதிராகவும், இஸ்ரேலுக்கு எதிராக கண்டன் கோஷங் களை எழுப்பினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர்கள் ஜாகீர் உசேன் மனிதநேய மக்கள் கட்சியை நிர்வாகிகள் உட்பட 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்

# தேர்தல் தேதி அறிவித்த பின்னர்தான் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை' – நயினார் நாகேந்திரன்

**திருச்சி, மார்ச் 03:**

திருச்சியில் பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது,

கூட்டணி பேச்சுவார்த்தை தொடர்பான கேள்விக்கு , "கூட்டணி பேச்சுவார்த்தை எல்லாம் முடிந்துவிட்டது. தற்போதுவரை தொகுதிப் பங்கீடு குறித்து பேசவில்லை. தேர்தல் தேதி அறிவித்த பின்னர்தான் அதுகுறித்து பேசப்படும்." என தெரிவித்தார்.

தேர்தலுக்குமுன் தவெக இணைய வாய்ப்புள்ளதா? என்ற கேள்விக்கு, அதுபற்றி அவர்களிடம்தான் கேட்கவேண்டும் என்றார்.

இபிஎஸ்-ன் டெல்லிப் பயணம் தொடர்பான கேள்விக்கு, அதுகுறித்து இபிஎஸ் அவர்களுக்கும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கும்தான் தெரியும்.

அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு வளர்ச்சிக் கண்டுள்ளது என்ற முதலமைச்சரின் பேச்சுத் தொடர்பான கேள்விக்கு,



"எந்தெந்த துறைகள் என்றுக் கூறினால் கேட்கலாம். அனைத்து வகையிலும் இன்று தமிழ்நாடு தாழ்ந்து போயுள்ளது. கையில் புத்தகம் வைத்திருக்க வேண்டிய மாணவர்கள் கையில் கஞ்சா உள்ளது. 2 வயது குழந்தைமுதல் வயதான பெண்கள்வரை நடமாட முடியவில்லை இன்று. தேசிய மகளிர் ஆணையம் 50% பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத மாநிலம் தமிழ்நாடு எனக் கூறியுள்ளது. இந்தியாவிலேயே அதிக தற்கொலைகள் நடக்கும் மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. திமுகவின் ஒரேநோக்கம் உதயநிதி ஸ்டாலினை முதலமைச்சராக்குவது. அதற்காகத்தான் இந்த தேர்தலை சந்திக்கின்றனர்.

பண பலம், அதிகார பலத்தை அனைத்து இடத்திலும் கொண்டுள்ளனர். ஆனால் அதைவிட மக்கள் பலம்தான் பெரிது என்பதை இந்தத் தேர்தல் நிரூபிக்கும்." என தெரிவித்தார்.

# அன்னைநகரில் இறகு பந்து உள்விளையாட்டு அரங்கம்: குமரி எம்பி விஜய்வசந்த் அடிக்கல் நாட்டினார்

**கன்னியாகுமரி, மார்ச் 03:**

கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் தொகுதியில் மக்களுக்கு தனது சொந்த செலவில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை செய்து வருகிறார், தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் மக்களின் தேவைகளை அறிந்து நிதி ஒதுக்கீடு செய்து சாலை பணிகள், அங்கன்வாடி, நியாயவிலைக் கடை, பள்ளி வகுப்பறைகள், உயர் கோபுர சோலார் மின்விளக்கு போன்ற முக்கிய பணிகள் செய்து வருகிறார், அந்த வகையில் அன்னைநகர் மக்களின் கோரிக்கையை ஏற்று உள்விளையாட்டு அரங்கம் அமைக்க நிதி ஒதுக்கீடு



செய்தார்.

கன்னியாகுமரி மாவட்டம் இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம். பள்ளம் துறை ஊராட்சி, அன்னை நகரில் பாரளுமன்ற உறுப்பினர் தொகுதி (2025-2026) மேம்பாடு நிதியிலிருந்து ரூ. 25,00,000 இலட்சம் செலவில் உள் விளையாட்டு மைதானம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து இன்று அடிக்கல் நாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. அன்னைநகர் பங்குதந்தை ரெமண்ட் அர்ச்சிப்பில் கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் இறகு பந்து உள்விளையாட்டு அரங்கம் அமைக்க அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் வட்டார தலைவர் அசோக்ராஜ், மாவட்ட துணைத் தலைவர் மணக்குடி லாரன்ஸ், நாகர்கோவில் மாநகர பொதுச்செயலாளர் கலையரசு, அன்னை நகர் ஊர் தலைவர் கென்னடி, அன்னை நகர் முன்னாள் ஊர் தலைவர் ஆன்சல், அன்னை நகர் காங்கிரஸ் தலைவர் லூயிஸ், பள்ளம் பஞ்சாயத்து கமிட்டி காங்கிரஸ் தலைவர் கெவின், புத்தளம் பேரூராட்சி தலைவர் ரங்கன், தர்மபுரம் பஞ்சாயத்து பொருளாளர் ரவிசந்திரன், காங்கிரஸ் நிர்வாகிகள் செல்வி, சார்லஸ் செல்லையா, ஒப்பந்தக்காரர் முருகன் உட்பட ஊர் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



















ADIYOGI

REAL ESTATE WHOLESALE

VADACHENNAI CALL DRIVER



ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ருவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901










## WANTED

Site Supervisor required
for construction work in Ambattur
Contact:
8428872887




## WANTED

Needed female staff
to look after
children, patients.
Contact
9150989424










## WANTED

M/F லோடுமேன்,பிக்கர், டிரைவர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift
7540003588




## WANTED

Retd, VRS, Home Makers,
NRIs, Business Person
Contact
8248951872



## கவிதை அரங்கம்!



தனித்திருக்கும்
போதெல்லாம்
மனம் உன்னிடமே
தாவுது...

மறைத்துக்கொள்
நெஞ்சத்தை
எனக்கு சொந்தமான
இதயத்தை
தீண்ட காற்றுக்கும்
அனுமதியில்லை


விழிகளுனை
கண்டுவிட்டால்
மனமும்
ஏனோ பறக்கின்றதே

சிறகடித்து
வண்ணத்துப்பூச்சியாய்

கூந்தலை பிடித்திழுத்து
விளையாடி ஜிமிக்கியும்
உன்னை அடிக்கடி
ஞாபகபடுத்துது

தாயை காண
காத்திருக்கும்
குழந்தையாய்
உன் வழி
நோக்கி
என் விழிகளும்
காத்திருக்கு

## வாழ்க்கை தத்துவம்...



நமது சொல் அல்லது செயலுக்கு மூலகாரணியாக இருப்பது நம் எண்ணமே. நாம் எதையும் சொல்லும் முன்போ அல்லது எதையும் செய்யும் முன்போ அதற்கான உந்துதல் முதலில் நம் எண்ணத்தில்தான் உருவாகிறது.


உருவத்தில் எப்படி இருந்தாலும் உள்ளத்தில் குழந்தையாய் இரு, இந்த உலகமே உன்னை நேசிக்கும்.

எல்லாக் காயங்களுக்கும் ஒரு மருந்து, குழந்தைகளின் புன்னகை என்னும் அருமருந்து.

எல்லாத் துன்பங்களுக்கும் இரண்டு மருந்துகள் உள்ளன. ஒன்று காலம், இன்னொன்று மௌனம்.

28. நீ சிரித்து பார் உன் முகம் உனக்கு பிடிக்கும், மற்றவர்களை சிரிக்க வைத்து பார் உன்முகம் எல்லோருக்கும் பிடிக்கும்.

## "வழி காட்டா பழி காட்டிகள்"



போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ள வேண்டியே கிராமத்திலிருந்து நகரத்திற்கு இடம் பெயர்ந்தவன் அரவிந்த்.

முதல் முயற்சி தோல்வியானது.

இரண்டாம் முயற்சி, இன்னொரு தோல்வியைக் கொண்டு வந்தது.

மூன்றாம் முயற்சிக்காகத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருந்த போது காதில் விழுந்தன சில குரல்கள்.

“இவனெல்லாம் எதுக்கு இன்னும் படிக்கறான்?"

"மூணு தடவை எழுதி ஃபெயில் ஆயாச்சு... நாலாவதொரு ஃபெயிலை வாங்கணுமா? ”

“இதுக்கு செலவு பண்ற நேரத்துக்கு வேலை வெட்டி ஏதாவது பார்த்தா... காசு பணமாவது வரும்"

அக்கம்பக்கத்தார்கள், நண்பர்கள், தெருவின் மூலை பெட்டிக்கடைக்காரர் உட்பட எல்லோரும் கிண்டலடித்தனர்.

அதனால் அவன் சோர்ந்து புத்தகத்தை மூடினான். அவன் தாய் அருகில் வந்தமர்ந்தாள்.

“எல்லோரும் கேலி பேசறாங்கம்மா...” அவன் குரல் உடைந்தது.

அம்மா சிரித்தாள். "பழி சொல்ல ரொம்ப பேர் இருப்பாங்க.... ஆனா உனக்கு வழி காட்டுறவன் ஒரே ஒருத்தன்தான்... அவன் நீயேதான்!... தோல்வி எங்கே?ன்னு பாரு.... அங்கதான் வெற்றி கதவும் இருக்கும்.”

அன்றிரவு அவன் தன் தவறுகளை பட்டியலிட்டான். கணக்கில் பலவீனம். நேர மேலாண்மை இல்லை. பழைய கேள்வித்தாள்களைத் திருப்பிப் பார்த்ததே இல்லை.

மறுநாள் பழித்தவர்களிடமே சென்று கேட்டான்.

“எனக்கு கணக்கு சொல்லிக் கொடுப்பீங்களா?”

அவர்கள் தடுமாறினர். அவர்களுக்குச் சொல்லத் தெரிந்தது குறை மட்டும்தான்.

அவன் நகரில் உள்ள ஒரு நூலகத்துக்குச் சென்றான். பழைய கேள்வித்தாள்களைப் படித்தான்.

ஆறு மாதங்கள். காலை நான்கு மணியிலிருந்தே ஆரம்பித்தான். பழைய கேள்வித்தாள்கள். நேரக் கணக்கு. முந்தைய தோல்விகளைப் பகுத்து ஆய்வு செய்தான்.

மீண்டும் தேர்வு.

முடிவு வந்தது... வெற்றி... என...

அதே தெருவில், அதே மனிதர்கள் இந்த முறை குரல் மாறியிருந்தது.

“நாங்க சொன்னோமல்ல?... நீ சாதிப்பாய்ன்னு!”

அரவிந்த் சிரித்தான்.

பழி சொல்வது எளிது. வழி சொல்லுவது அரிது. ஒவ்வொருவரும் தன் வழியைத் தேடுவது அவசியம்.

(முற்றும்)

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்



## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!

ஒருத்தன் இந்தாடா.. பொங்கல் சாப்பிடுனு ஒரு பாக்ஸை கொடுத்தான்.

திறந்து பார்த்தா பாக்ஸ் காலியா இருந்துச்சு.. என்னடா பொங்கலை காணோம்னு கேட்டேன்..

அதுக்கு அவன் சொல்றான்.. இதுதான் டா காணும் பொங்கல்னு சொல்லிட்டு போறான்..



## தினம் ஒரு சமையல்



### வெண்டைக்காய் புளிக்குழம்பு

**தேவையான பொருட்கள்:**

வெண்டைக்காய் -250 கிராம்
வெங்காயம் -1/4 கப் சாம்பார்
உரித்த பூண்டு -1/4 கப்
இஞ்சி பூண்டு விழுது -1/2 டீஸ்பூன்
தக்காளி -2
தனியாத்தூள் -2 டீஸ்பூன்
மிளகாய் தூள் -1 டீஸ்பூன்
புளிக்கரைசல் -1/2 கப்

**அரைப்பதற்கு:**

தேங்காய் துருவல் -2 டேபிள் ஸ்பூன்
தனியா -1 டீஸ்பூன்
வற்றல் -2
உப்பு -தேவையான அளவு

**தாளிக்க:**

நல்லெண்ணெய் -4 டேபிள் ஸ்பூன்
கடுகு -1/4 டீஸ்பூன்
வெந்தயம் -1/4 டீஸ்பூன்
மிளகாய் -4 வற்றல்
கறிவேப்பிலை



**செய்முறை:**

வெண்டைக்காயை கழுவி, சுத்தம் செய்து,நறுக்கி வைத்துக் கொள்ளவும்.

வாணலியை ஸ்டவ்வில் வைத்து சூடானதும் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் நறுக்கி வைதுள்ள வெண்டைக்காயை சேர்த்து நன்கு வதக்கவும். நான் மண் சட்டியில் வதக்கியுள்ளேன்.

கடாயில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் கடுகு, வெந்தயம்,வற்றல்,கறிவேப்பிலை சேர்த்து பொரிந்ததும், உரித்து வைத்துள்ள வெங்காயம்,பூண்டு சேர்த்து பொன்னிறமாக வதக்கவும்.

அத்துடன் இஞ்சி பூண்டு விழுது சேர்த்து வதக்கி,தக்காளி சேர்த்து மேலும் இரண்டு நிமிடங்கள் வதக்கவும்.

பின்னர் மஞ்சள் தூள்,மல்லி தூள்,மிளகாய் தூள் சேர்த்து எண்ணெய் பிரியும் வரை வதக்கவும். அத்துடன் அரைத்த மசாலா விழுதை சேர்த்து வதக்கவும்.

அத்துடன் புளிக்கரைசலை சேர்த்து, கொஞ்சம் வெல்லம்,தேவையான தண்ணீர் சேர்த்து பச்சை வாசனை போகும் வரை பத்து நிமிடங்கள் கொதிக்க வைக்கவும்.

புளி சேர்த்து மசாலா கொதித்ததும் எடுத்து வெண்டைக் காயில் சேர்த்து ஐந்து நிமிடங்கள் கொதிக்க வைத்து இறக்கினால் சுவையான வெண்டைக்காய் புளிக்குழம்பு தயார்.

## முள்ளுக்கீரை பயன்கள்



தமிழில் முள்ளுக்கீரை அல்லது முள்ளிக்கீரை என்று அழைக்கப்படும் ‘அமராந்தஸ்’ என்ற தாவரவியல் இனத்தை சேர்ந்த கீரை, முட்கள் நிறைந்த ஒரு மூலிகையாகும்.

சிவப்பு நிற நிமிர்ந்த தண்டுகள், சில சமயங்களில் ஏறுவரிசை, 30-150 செ.மீ. நீளத்தில் கிளைத்திருக்கும். இலைகள் முட்டை வடிவில் இருந்து நீள்வட்டம், ஈட்டி-நீள் சதுரம், வடிவில் இருக்கும். மென்மையான இலை தண்டு 1 முதல் 9 செ.மீ. பூக்கள் பச்சை நிறத்திலும் காணப்படும். இந்தியாவில் பரவலாக காணப்படுகிறது.


இந்த மூலிகை கீரையின் மருத்துவ குணங்கள் ஏராளம். சிறுநீர் நன்றாக வெளியேற உதவுகிறது. கல்லீரல் செயல்பாட்டை ஊக்குவிக்கிறது. முறிந்த எலும்பு சேர துணையாக இருக்கிறது. மலமிளக்கியாக செயல்படுவதுடன் உடலில் இருக்கும் சளியை வெளியேற்றுகிறது.

வெப்பம் மற்றும் விஷத்தை நீக்குகிறது. செரிமானத்தை மேம்படுத்துகிறது. பெண்களுக்கு அதிகமான மாதவிடாய் போக்கை கட்டுப்படுத்துகிறது. சில நாடுகளில் பாம்பு போன்ற விஷக்கடி பாதிப்பை குறைக்க இந்த கீரையை பயன்படுத்துகின்றனர்.

சீனா, இந்தியா மற்றும் நேபாளத்தில் தோல் அழற்சிக்கான வெளிப்பூச்சு மருந்தாகவும் தீக்காய தீவிரத்தை குறைக்கவும் பயன்படுகிறது.

புரதம் மற்றும் கால்சியம் அதிகம். இதை மெக்சிகோ போன்ற நாடுகளில் உணவுப் பயிராகவும், ஆஸ்திரேலியாவில் கீரைக்கு மாற்றாகவும், சீனாவில் காய்கறியாகவும் பயன்படுத்துகிறார்களாம்...!. ஆனால், தமிழ்நாட்டில் மழை பெய்தால் எங்கு பார்த்தாலும் முளைத்து கிடக்கும் இந்த முள்ளுக்கீரையை பற்றி தெரியாமல் பலரும் பயன்படுத்தாமல் தவற விட்டுவிடுகிறார்கள் என்பதே உண்மை.

## பாக்ஸ் ஆபிஸில் தள்ளாடும் தெறி ரீ-ரிலீஸ்.. இதுவரை செய்துள்ள வசூல் எவ்வளவு தெரியுமா?



விஜய் நடித்து ரசிகர்களின் மனம் கவர்ந்த திரைப்படங்களை சமீபகாலமாக ரீ-ரிலீஸ் செய்து வருகிறார்கள். கில்லி, சச்சின் போன்ற படங்கள் ரீ-ரிலீஸ் செய்யப்பட்டு வசூலில் நல்ல வரவேற்பை பெற்றது. இதுவரை தமிழ் சினிமாவில் ரீ-ரிலீஸ் செய்யப்பட்ட படங்களிலேயே அதிக வசூல் செய்த படம் என்கிற சாதனையை கில்லி படைத்துள்ளது. அந்த வரிசையில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டு ரீ-ரிலீஸ் செய்யப்பட்ட படம் தான்.

விஜய்யின் திரை வாழ்க்கையில் மாபெரும் வெற்றிபெற்ற திரைப்படங்களில் ஒன்று தெறி. இப்படத்தின் மூலம் முதல் முறையாக அட்லீ - விஜய் கூட்டணி அமைத்தனர். இப்படத்தின் வெற்றியை தொடர்ந்து மெர்சல், பிகில் என தொடர் வெற்றிகளை கொடுத்தனர்.

கடந்த வாரம் தெறி படம் ரீ-ரிலீஸ் ஆன நிலையில், எதிர்பார்த்த அளவிற்கு வரவேற்பு கிடைக்கவில்லை. இதனால், பாக்ஸ் ஆபிஸில் மிகவும் குறைவான வசூல் வந்துள்ளது. இந்த நிலையில், மூன்று நாட்களில் தெறி ரீ-ரிலீஸ் எவ்வளவு வசூல் செய்துள்ளது என்பது குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, இப்படம் மூன்று நாட்களில் ரூ. 1.4 கோடி மட்டுமே பாக்ஸ் ஆபிஸில் வசூலித்துள்ளது. இது மிகவும் குறைவான வசூலாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## சினிமா



நடிகை சல்மா அருண் தன்னுடைய சமீபத்திய அழகிய போட்டோஷூட் புகைப்படங்களை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவு செய்துள்ளார். இதோ அந்த புகைப்படங்கள்:

## துரந்தர் 2 படத்தின் ரன் டைம் இவ்வளவு நேரமா.. ரசிகர்களின் ரியாக்ஷன் என்ன



இயக்குநர் ஆதித்யா தார் இயக்கத்தில் ரன்வீர் சிங் நடிப்பில் உருவாகி கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் வெளிவந்த படம் துரந்தர். இப்படத்தில் அக்ஷய் கன்னா, மாதவன், அர்ஜுன் ராம்பால், சஞ்சய் தத் ஆகியோர் நடித்திருந்தனர்.

மேலும் நடிகை சாரா அர்ஜுன் இப்படத்தின் மூலம் கதாநாயகியாக சினிமாவில் அறிமுகமாகியுள்ளார். பெரிதும் எதிர்பார்ப்புடன் வெளிவந்த துரந்தர் உலகளவில் ரூ. 1250 கோடி வசூல் செய்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றனர். இதன்மூலம் இரண்டாம் பாகத்தின் மீது எத்தகைய எதிர்பார்ப்பு இருக்கிறது என்பது தெளிவாக தெரிகிறது.

வருகிற மார்ச் 19ஆம் தேதி துரந்தர் இரண்டாம் பாகம் வெளியாகிறது. சமீபத்தில் இதனுடைய டீசர் வெளிவந்து நல்ல வரவேற்பை பெற்றது.

அடிபட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் அண்ணாமலை.. குடும்பத்தை விட்டு வெளியேறும் மீனா.. சிறகடிக்க ஆசை சீரியல் புரோமோ வீடியோ

இந்த நிலையில், துரந்தர் திரைப்படத்தின் ரன் டைம் குறித்து தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படத்தின் மொத்த ரன் டைம் 3 மணி நேரம் 55 நிமிடங்கள். கிட்டத்தட்ட நான்கு மணி நேரம் இப்படத்தின் ரன் டைம் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஒரு படத்தின் ரன் டைம் இவ்வளவு மணி நேரமா என ரசிகர்கள் ஷாக்காகியுள்ளனர். துரந்தர் முதல் பாகத்தின் ரன் டைம் 3 மணி நேரம் 34 நிமிடங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரம்மா ஏன் படைக்கிறார்? விஷ்ணு ஏன் காப்பாற்றுகிறார்? சிவன் ஏன் அழிக்கிறார்?



இந்து தொன்மவியல்படி பிரம்ம தேவன் உலகில் உள்ள அனைத்து உயிர்களையும் படைக்கிறார், மகாவிஷ்ணு அந்த உயிர்களைக் காக்கிறார், சிவபெருமான் உயிர்களை அழிக்கிறார். எதற்காக மூவரும் வேறு வேறு தொழிலைத் தேர்ந்தெடுத்தனர். இதன் நோக்கம் என்ன என்பதை இப்பதிவில் அறிவோம்!

முதலில் சிவபெருமான் தன்னிலிருந்து சக்தியை பிரித்து ஆதிசக்தியை உருவாக்கினார். பிறகு அவர் மகாவிஷ்ணுவை படைத்தார். மகாவிஷ்ணுவின் நாபிக் கமலத்தில் இருந்து பிரம்ம தேவர் தோன்றுகிறார். படைத்தல் தொழிலை முதலில் ஆரம்பித்தது சிவபெருமான்தான். பின்னர் அந்தத் தொழில் பிரம்ம தேவருக்கு சென்றது. இப்போது கடவுள்கள் இருக்கின்றனர். அவர்கள் கடவுளாகக் கொள்வது யார்? எதற்காக அவர்கள் பிரபஞ்சத்தைப் படைக்க எண்ணினர்.

படைப்பு கடவுள் பிரம்மா: பிரம்ம தேவர் முதலில் பிரபஞ்சத்தை உருவாக்கினார். விண்வெளி, அண்ட சராசரம், பூமி உள்ளிட்ட கிரகங்களை எல்லாம் படைத்தார். அதன் பின்னர் மனிதர்களையும் மற்ற உயிரினங்களையும் அவர் படைத்தார். காஷ்யப முனிவர் - அதிதி மூலம் பல நேர்மறை உயிரினங்கள் உலகில் தோன்றின. காஷ்யப முனிவர் - திதி மூலம் பல எதிர்மறை உயிரினங்களும் உலகில் தோன்றின. தேவர்களும் அசுர்களும் படைக்கப்பட்டனர். கருடனும் நாகமும் கூட படைக்கப்பட்டன. இப்படி ஒவ்வொரு உயிருக்கும் அதற்கு எதிரான உயிர்கள் படைக்கப்பட்டன.

ஒரே மாதிரியான எண்ணங்கள் கொண்ட மனிதர்களால் இந்த உலகத்தை உய்விக்க முடியாது. உணவுச் சங்கிலியில் முதலில் புல் தோன்றுகிறது. புல்லினை தாவர உண்ணிகள் மேய்கின்றன. தாவர உண்ணிகளை புலி, சிங்கம் போன்ற மாமிச உண்ணிகள் கொன்று சாப்பிடுகின்றன. அந்த மாமிச உண்ணிகள் இறந்த பின் கழுகு, காக்கை, நரி, புழு, பூச்சி உள்ளிட்ட விலங்குகளுக்கு உணவாகிறது. மீதமுள்ள எச்சங்கள் மண்ணுக்கு உரமாகின்றன. அந்த மண்ணில் மீண்டும் புற்கள் முளைக்கின்றன. மீண்டும் அதைத் தாவர உண்ணிகள் உண்ணத் தொடங்குகின்றன. உலகில் ஒவ்வொரு உயிரும் இன்னொரு உயிரை கட்டாயம் சார்ந்து இருக்கும்படியே உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பணியினை பிரம்ம தேவர் செய்கிறார். படைத்தல் மட்டுமல்ல, ஒருவரின் அறிவையும், அவருக்கு உண்டான விதியையும் பிரம்ம தேவர் உருவாக்குகிறார்.

காக்கும் கடவுள் விஷ்ணு: பிரம்ம தேவர் படைத்த உயிர்களுக்குள் அடிக்கடி எதிர் கருத்துகள் தோன்றும். ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக் கொண்டன. தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் யுத்தம் நிகழ்ந்தது. கருடனுக்கும் நாகத்திற்கும் சண்டை நிகழ்ந்தது. ஒவ்வொரு உயிரும் சண்டையிடும்போது தடுக்கப்பட வேண்டும். அவ்வாறு தடுக்கப்படாவிட்டால் அனைத்து உயிரினங்களும் அழிந்து விடும். அதனால் அசுரர்களை அழித்து, மகாவிஷ்ணு தேவர்களைக் காத்தார். கருடனும் நாகமும் மகாவிஷ்ணுவுக்கு வாகனமும் படுக்கையும் ஆனது. இயற்கை சமநிலைக்கு இரண்டு உயிர்களும் அழிந்து விடாமல் பாதுகாக்கிறார்.

ஒவ்வொரு உயிரும் காக்கப்படாமல் அழிந்தால், அதன் பின்னர் பிரபஞ்சத்தில் எந்த உயிர்களும் இருக்காது. இதனால் உயிர்களைக் காப்பதற்காக மகாவிஷ்ணு ஒவ்வொரு முறையும் அவதாரம் எடுக்கிறார். பூமியைக் காக்க அவர் வராஹ அவதாரம் எடுத்தார், தர்மத்தை உரைக்க கிருஷ்ண அவதாரம் எடுத்தார், வாழ்வியலைக் கற்பிக்க ராம அவதாரம் எடுத்தார். உயிர்களின் துன்பம் அதிகரிக்கும்போது அவர்களைக் காக்க மகாவிஷ்ணு வருவார்.

அழித்தல் கடவுள் ஈசன்: சிவபெருமான் அனைத்து படைப்புக்கும் மூலகாரணமாக இருந்தாலும் அழித்தல் தொழிலை அவர் செய்கிறார். அவர் ஏன் அழிக்க வேண்டும்? தேவர்கள், அசுரர்கள் சண்டையில் அழிவு நடைபெறாமல் இருந்தால் அவர்களே பெருகி இருப்பார்கள். மற்ற உயிர்கள் தோன்றியிருக்காது. டைனோசர்கள் அழியாவிட்டால் மனித இனம் தோன்றி வாழ்ந்திருக்க முடியாது.

சிவபெருமான் ஒரு சமயம் எமதர்ம ராஜாவை எட்டி உதைத்து உலகில் உயிர்கள் இறக்காதபடி செய்து விட்டார். அதற்குள் பூமியில் மக்கள் கூட்டம் நிரம்ப, உணவு பஞ்சம் ஏற்பட பூமியும் பாரம் தாளாமல் ஆட்டம் கண்டது. அதன் பின்னர் பூமா தேவியின் வேண்டுகோளின்படி சிவன் எமனை மீண்டும் உயிர்ப்பித்து உயிர்களை பறிக்கும் வேலையை கொடுத்தார். அழிவு என்பதும் தேவைக்குரிய ஒரு செயலாகும். அதை செய்யாவிட்டால் உலகின் சமநிலை பாதிக்கப்படும். ஒரு உயிர் அழியும்போதுதான் மற்ற உயிர்கள் தோன்ற வாய்ப்பு கிடைக்கும். அதனால் அழித்தலை சிவபெருமான் செய்கிறார்.



- சிவசக்தி
நாப்பிராம்பட்டி,
ஊத்தங்கரை
கிருஷ்ணகிரி மாவட்டம்

## தினம் ஒரு தலைவர்கள்

# கமலா சட்டோபாத்தியாயா வரலாறு

கமலா சட்டோபாத்தியாயா 3 ஏப்ரல் 190329 அக்டோபர் 1988) என்பவர் ஓர் இந்திய சமூக சீர்திருத்தவாதி, பெண்ணியவாதி மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர் ஆவார். இவர் இந்திய விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டதற்காக நினைவு கூரப்படுகிறார். மேலும் இந்திய கைவினைப் பொருள்கள், கைத்தறி வளர்ச்சி, சுதந்திர இந்தியாவில் நாடக மறுமலர்ச்சி ஆகியவற்றிற்கு உந்து சக்தியாக இருந்தார். மேலும் கூட்டுறவு இயக்கத்தின் முன்னோடியாகவும், இந்திய பெண்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்காக உழைத்தவர்.
சங்கீத நாடக அகாதெமியின் துணைத்தலைவர், பாரதீய நாட்டிய சங்கத்தின் தலைவர், அகில இந்திய கைவினைஞர்கள் வாரியத் தலைவர், யுனெஸ்கோவின் உறுப்பினர் எனப் பல பதவிகளை வகித்து சிறப்பாகப் பணியாற்றியவர்.[1]



### வாழ்க்கை

இவர் 3 ஏப்ரல் 1903 அன்று மங்களூரில் இவரது பெற்றோருக்கு நான்காவது மகளாகப் பிறந்தார். இவரின் தந்தை ஆனந்தையா தரேஸ்வர் மாவட்ட ஆட்சியராக மங்களூரில் இருந்தார், இவரின் தாயார் பெயர் கிரிஜாபாய் ஆகும்.
கமலாதேவி படிப்பில் கெட்டிக்காராக இருந்தார் இவரது பெற்றோர்களைப் பார்க்க வீட்டிற்கு வரும் மகாதேவ கோவிந்த ராணடே, கோபாலகிருஷ்ண கோகலே, ராமாபாய் ராணடே, அன்னிபெசண்ட் அம்மையார் போன்ற தலைவர்களின் உரையாடல்களைக் கேட்டு, இளம் வயதிலேயே சுதேச இயக்கத்தில் ஆர்வம் கொண்டார்.
இவர் சமசுகிருத பாரம்பரிய நாடக்கலையான கேரள-கூடியாட்டத்தை, அதில் சிறந்த ஆசிரியரும் அபிநயத்தில் சிறந்த நடன ஆசிரியரான பத்மசிறீ மணி மாதவ சாக்கியார் என்பவரின் ஊரான கிள்ளிக்குரிசிமங்களத்தில் உள்ள அவரது வீட்டில் தங்கியிருந்து கற்றார்.
இவரது இளமைக் காலம் சோகம் நிறைந்ததாக இருந்தது. இவரது முன்மாதிரியாக இருந்த இவரது அக்காள், சகுணா, அவரது இளம் வயதில் திருமணம் முடிந்த உடனேயே, இறந்து போனார். கமலாவின் தந்தை அவருக்கு ஏழு வயதிருக்கும் போதே இறந்தார்.

### முதல் திருமணம்

இவருக்கு 1917இல், 14 வயதானபோது திருமணம் நடந்தது ஆனால் இரண்டாண்டுகளில் கணவர் இறந்தார்.
1920களில்
அரிந்திரநாத்துடனான திருமணம்
இதற்கிடையில், சென்னை ராணி மேரி கல்லூரியில் தன் படிப்பைத் தொடர்ந்தார். அப்போது அவருடன் படித்த சக மாணவரான சுஹாசினி சட்டோபாத்யாவின் தங்கை சரோஜினி நாயுடு, அறிமுகமானார். பின்னர் தங்கள் திறமையான சகோதரனான அரியை கமலாதேவிக்கு அறிமுகப்படுத்தினர். அவர் நன்கு அறியப்பட்ட ஒரு கவிஞர்-எழுத்தாளர், நடிகர் போன்ற பன்முகத்தன்மை உடையவராக இருந்தார். கலைகளில் ஈடுபாடு உடைய இருவருக்கும் நல்ல புரிதல் உண்டாயிற்று.

கமலாதேவிக்கு இருபது வயது இருக்கும்போது அரிந்திரநாத் சட்டோபாத்யாய் என்பவருடன் திருமணம் நடந்த்து. இந்த விதவை திருமணத்திற்கு சமூகத்தில் எதிர்ப்பு கடுமையாக இருந்தது.
இந்த தம்பதியினரின் ஒரே மகன் ராமா அடுத்த ஆண்டு பிறந்தார். பிற்காலத்தில் இவர் சில திரைப்படங்களில் நடித்தார். அக்காலத்தில் நல்ல குடும்பப் பெண்கள் திரைப்படங்களில் நடிப்பது ஆதரிக்கப்படாத காலம் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் முதலில் ஊமைத் திரைபங்களில் நடித்தார். இதில் ஒன்று கன்னடத் திரையுலகின் முதல் படமான, மிரிச்சகட்டிகா (வசந்தசேனா) (1931). இரண்டாவது படமாக தான்சேன் என்ற இந்தி படத்தில் 1943இல் நடித்தார். கே. எல். சைகல் மற்றும் குர்ஷீத் உடன் நடித்தனர்.[4] தொடர்ந்து சங்கர் பார்வதி (1943), மற்றும் தான்னா பஹத் (1945) ஆகிய படங்களில் நடித்தார்.
திருமணமான பல ஆண்டுகளுக்கு பிறகு, கமலாதேவி விவாகரத்து பெற்றார். அந்நாளில் இது பெண்கள் பின்பற்ற அஞ்சும், தயங்கும் மிகப் புதிதான ஒரு நடைமுறை. எனவே இதைக் குறித்தும் கமலா தேவி மீது மிகுந்த விமர்சனங்கள் எழுந்தன.

### இலண்டன் செல்லல்

அவர்களது திருமணத்திற்கு கொஞ்ச காலத்திற்கு பிறகு அரிந்திரநாத் தனது முதல் வெளிநாட்டு பயணத்தை மேற்கோண்டு, லண்டன் சென்றார். ஒரு சில மாதங்கள் கழித்து கமலாதேவி, அங்கு சென்று அவருடன் சேர்ந்தார், அவருடன் சேர்ந்து இலண்டன் பல்கலைக்கழகத்தின் பெட்ஃபோர்ட் கல்லூரியில் சமூகவியல் பாடத்தில் டிப்ளோமா பட்டம் பெற்றார்.

### விடுதலை இயக்கத்திற்கான அழைப்பு

கமலாதேவி இலண்டனில் இருந்தபோது, இந்தியாவில் காந்தி ஒத்துழையாமை இயக்கத்துக்கு 1923இல் அழைப்புவிடுத்ததை அறிந்து இந்தியா திரும்பி, சேவாதளத்தளம் என்னும் காந்திய அமைப்பில் இணைந்தார். விரைவில் கமலாதேவி தளத்தின் மகளிர் பிரிவின் பொறுப்பாளராக ஆனார். சேவாதளத்தின் சார்பில் அனைத்திந்திய அளவில் ஆளெடுப்பது பெண்களுக்கு பயிற்சி அளிப்பது ஆகிய பணிகளில் ஈடுபட்டார்.

1926, இல் இவர் அனைத்திந்திய மகளிர் மாநாடு (AIWC) அமைப்பின் நிறுவனரான மார்கரெட் கசின்சு என்பவரை சந்தித்தார். அவரின் தாக்கத்தால் சென்னை மாகாண சட்டசபைக்கு போட்டியிட்டார். இவர் இந்திய சட்டமன்றத்துக்கு போட்டியிட்ட முதல் பெண் ஆவார் இவர் தேர்தல் வேலைகளை சில நாட்கள்தான் பார்க்கதான் இயன்றது. ஆனாலும் இவர் 55 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியுற்றார்.

அனைத்திந்திய மகளிர் மாநாடு அடுத்த ஆண்டில், அனைத்து-இந்திய மகளிர் மாநாடு (AIWC) நிறுவப்பட அதன் முதல் அமைப்புச் செயலாளராக ஆனார். தொடர்ந்து வந்த ஆண்டுகளில், அ.இ.ம.மா. கிளைகள் நாடு முழுவதும் இயங்கத் துவங்கின, தன்னார்வ திட்டங்கள் கொண்டு மதிப்புள்ள தேசிய அமைப்பானது.
கமலாதேவி, இந்தியா மட்டுமின்றி அய்ரோப்பிய நாடுகளிலும் விரிவாகச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பெண்களுக்கான கல்வி, சமுதாய வளர்ச்சிக்கான திட்டங்கள் முதலியவை குறித்து ஆராய்ந்தார். அதன் பயனாக டெல்லியில் பெண்களுக்கான ஹோம் சயின்ஸ் (LADY IRVIN COLLEGE FOR HOME SCIENCE) கல்லூரியை ஆரம்பித்தார்.
1930களில்
காந்தியடிகளால் 1930-ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட உப்பு சத்தியாகிரகக் குழு உறுப்பினர்களான ஏழு பேர்களில் இவரும் ஒருவராக இருந்து மும்பை கடற்கரையில் பெண்கள் பிரிவில் உப்பு சத்தியாக்கிரகம் செய்தார்.
உப்பு சத்தியாகிரகப் போராட்டத்தின்போது சுதேசி உப்பை மும்பையை பங்கு சந்தையில் விற்க முயன்றபோது கைது செய்யப்பட்டார். இதற்கு ஓராண்டு கழித்து 1936இல் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, ஜெயபிரகாஷ் நாராயணன், ராம்மனோகர் லோகியா, மினுமசானி முதலிய தலைவர்களுடன் இணைந்து பாடுபட்டார்.

1940களில்
இரண்டாம் உலகப்போர் துவங்கிய காலத்தில் கமலாதேவி இங்கிலாந்தில் இருந்தார், அவர் உடனடியாக மற்ற நாடுகளுக்கு இந்தியாவின் நிலைமையை இந்தியாவின் பிரதிநிதியாக சென்று இந்தியாவின் விடுதலைக்கு ஆதரவைத் திரட்டினார்.
விடுதலைக்கு பிந்தைய பணிகள்
இந்தியா சுதந்திரமடையும்போது இந்தியா பாகிஸ்தான் என இரண்டு நாடுகளான பிரிந்தன. இதனையொட்டி நாட்டில் இந்து முஸ்லீம் கலவரம் ஏற்பட்டது. இக்கலவரத்தில் பல்லாயிரம்பேர் படுகொலை செய்யப்பட்டனர். ஏராளமானவர்கள் படுகாயமடைந்தனர். பல லட்சம் இந்துக்களும், முஸ்லீம்களும் அகதிகளாக்கப்பட்டனர். இந்த வேளையில் மக்களுக்கு பரிதாபாத் நகரத்தில் சேவை மையம் அமைத்து 50,000 மக்களுக்கு மருத்துவ உதவியும், உணவு வசதியும், தங்குமிடமும் செய்து கொடுத்தார்.

இவ்வாறு மக்கள் மறுவாழ்வுக்கும் அதே சமயம் அவர்கள் இழந்த கைவினைத் தொழிலுக்கு உதவும் பணியினை இரண்டாம் கட்டமாக தொடங்கினார்.
இந்திய கைவினைப் பொருள்கள் மற்றும் கைத்தறி ஆகியவற்றிற்கு சுதந்திரத்திற்கு பிந்தைய காலத்தில் பெரும் புத்துயிர் அளிக்க வேண்டும் என பொறுப்பெடுத்து நவீன இந்தியாவில் அதன் மிகப்பெரிய மரபை காக்க பாடுபட்டார்.

### விருதுகள்

இவரது பணிகளை அங்கீகரிக்கும் விதமாக இந்திய அரசு பத்ம பூசன் விருதை 1955இல் அளித்தது. பின்னர் இரண்டாவது மிக உயரிய விருதான, பத்ம விபூசன் விருதை 1987லிலும், ராமன் மகசேசே விருதை 1966இல் பெற்றார். மேலும் சங்கீத் நாடக அகாடமி விருது , இசை, நடனம், நாடகம் ஆகியவற்றுக்காக இந்தியாவின் தேசிய அகாடமி, 1974 இல் வாழ்நாள் சாதனைக்கான விருது வழங்கியது.
யுனெஸ்கோ அமைப்பு கைவினைப். ஊக்குவிக்கும் இவரது பணிகளுக்காக 1977 இல் விருது வழங்கியது. சாந்தி நிகேதனும், அதன் மிக உயர்ந்த விருதை அளித்து இவரைப் பாராட்டியது.

# காஷ்மீரில் ஊடுருவ முயற்சி; பாகிஸ்தானிய டிரோன்களை சுட்டு வீழ்த்திய இந்திய ராணுவம்



**பூஞ்ச், மார்ச் 3:**

ஜம்மு மற்றும் காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் எல்லை கட்டுப்பாட்டு கோடு பகுதியில் பாகிஸ்தானை சேர்ந்த ஆளில்லா விமானங்கள் எனப்படும் டிரோன்கள் ஊடுருவ முயன்றன.

இதில், இந்திய வான்வெளியில் அத்துமீறி நுழைய முயன்ற 3 டிரோன்களை இந்திய ராணுவம் சுட்டு வீழ்த்தியுள்ளது. இந்த சம்பவம் காலை 5.45 மணி முதல் 6 மணிக்குள் நடந்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்திய ராணுவத்தின் பதிலடியை தொடர்ந்து, சில டிரோன்கள் பாகிஸ்தானுக்கே திரும்பி சென்றுள்ளன என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவம் மட்டுமின்றி சமீப நாட்களாக இதுபோன்ற அத்துமீறல்கள் அடிக்கடி நடந்து வருகின்றன. இந்திய ராணுவமும் தீவிர கண்காணிப்புடன் செயல்பட்டு வருகிறது.

ஈரான் நாட்டை நேற்று அமெரிக்காவும், இஸ்ரேலும் கடுமையாக தாக்கின. இதில் போர் ஜெட் விமானங்கள் வான் வழியே சென்று தாக்குதல் நடத்தின. இதனால் மத்திய கிழக்கு பகுதியில் கடும் பதற்றம் காணப்படுகிறது. இந்த சூழலில், பாகிஸ்தானின் அத்துமீறல் சம்பவம் முறியடிக்கப்பட்டு உள்ளது.

# 10 மாநிலங்களில் மாநிலங்களவை தேர்தல்; சோனியா காந்தி தலைமையில் காங்கிரஸ் ஆலோசனை கூட்டம்

**புதுடெல்லி, மார்ச் 3:**

நாடு முழுவதும் வருகிற ஏப்ரல் மாதத்துடன் மாநிலங்களவை உறுப்பினர்களாக பதவி வகிக்கும் 37 பேரின் பதவி காலம் நிறைவடைகிறது. இதனை தொடர்ந்து, அந்த 37 எம்.பி. பதவிகளுக்கான இடங்கள் காலியாக உள்ளன. இதனை முன்னிட்டு வருகிற மார்ச் 16-ந்தேதி மாநிலங்களவை தேர்தல் நடைபெறும். அதற்கான வாக்குகளும் அன்று மாலை 5 மணியளவில் நடக்கும் என இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்து உள்ளது.

இதனை முன்னிட்டு, தமிழகம், தெலுங்கானா, சத்தீஷ்கார், ஒடிசா, அசாம் உள்ளிட்ட 10 மாநிலங்களில் இருந்து 37 உறுப்பினர்கள் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். இந்த தேர்தலை அடுத்து, டெல்லியில் காங்கிரஸ் நாடாளுமன்ற குழு தலைவர் சோனியா காந்தியின் இல்லத்தில் அவருடைய தலைமையில், காங்கிரஸ் கட்சியின் உயர்மட்ட ஆலோசனை கூட்டம் நடந்தது. இதில், அக்கட்சியின் தேசிய தலைவர் கார்கே, மக்களவையின் எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி மற்றும் கட்சியின் பொது செயலாளர் கே.சி. வேணுகோபால் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




இதில், இமாசல பிரதேசம் மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களை காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்கிறது. தமிழகத்தில் ஆளும் தி.மு.க.வுடன் கூட்டணியில் உள்ளது. இதனால், அந்த மாநிலங்களில் காலியாக உள்ள உறுப்பினர்களுக்கான வேட்பாளர்கள் தேர்வு நடைபெறும் என கூறப்படுகிறது. இந்நிலையில், அடுத்த 2 நாட்களில் காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களின் பெயர்கள் வெளியிடப்படும் என கட்சி வட்டாரம் தெரிவித்து உள்ளது.

# சூதாட்டத்தில் பணத்தை இழந்ததால் கடன் அதிகரிப்பு: மனைவி, 3 குழந்தைகளை கொன்ற வியாபாரி

**புதுடெல்லி, மார்ச் 3:**

தலைநகர் டெல்லியின் அசாத்பூர் மண்டி பகுதியை சேர்ந்தவர் முன்ஜன் கேவாட். காய்கறி வியாபாரியான இவருக்கு திருமணமாகி அனிதா (வயது 27) என்ற மனைவியும் 3 குழந்தைகளும் (குழந்தைகள் வயது 5,4,3) இருந்தனர்.

இதனிடையே, சூதாட்டத்திற்கு அடிமையான கேவாட் பலரிடம் கடன் வாங்கி சூதாடியுள்ளார். இதில் பணத்தை அவர் இழந்துள்ளார். இதையடுத்து, பணத்தை கடன் கொடுத்தவர்கள் கேவாட் இடம் கேட்டுள்ளனர். மேலும், அவரின் கடன் அதிகரித்துள்ளது. இதனால் குடும்பத்தினரை கொலை செய்துவிட்டு தானும் தற்கொலை செய்ய கேவாட் முடிவெடுத்துள்ளார்.

இந்நிலையில், கடந்த புதன்கிழமை கேவாட் தனது மனைவி அனிதா மற்றும் 3 குழந்தைகளை கழுத்தறுத்து கொடூரமாக கொலை செய்துள்ளார். பின்னர், வீட்டை விட்டு வெளியேறிய கேவாட் ரெயில் மூலம் ராஜஸ்தான் தப்பிச்சென்றுள்ளார்.

மனைவி, 3 குழந்தைகளை கொலை செய்துவிட்டு கேவாட் தப்பிச்சென்றது குறித்து அக்கம்பக்கத்தினர் போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார், 4 பேரின் உடலையும் மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், 4 பேரையும் கொலை செய்துவிட்டு தப்பிச்சென்ற கேவாட்டை ராஜஸ்தான் மாநிலம் அஜ்மீரில் போலீசார் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட கேவாட்டிடம் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மெட்ரோ நகரங்களை இணைக்க 5, 6-வது ரயில் பாதைகள் அமைக்க முடிவு

**புதுடெல்லி, மார்ச் 3:**

அதிக போக்குவரத்து உள்ள சென்னை, டெல்லி போன்ற மெட்ரோ நகரங்களை இணைக்க 5, 6-வது ரயில் பாதைகளை அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.



டெல்லி, ஹவுரா, மும்பை, சென்னை ஆகிய 4 முக்கிய பெருநகரங்களை இணைக்கும் அதிக போக்குவரத்து கொண்ட ரயில் பாதைகளில் (எச்டிஎன்) 5, 6-வது ரயில் பாதைகளை அமைக்கும் திட்டம் தொடர்பான ஆலோசனையை ரயில்வே அமைச்சகம் அண்மையில் தொடங்கியுள்ளது. இவ்வாறு 5, 6-வது ரயில் பாதைகள் அமைப்பதன் மூலம் இந்த பாதைகளில் அதிக பயணிகள், சரக்கு ரயில்களை இயக்க முடியும்.

இந்த 4 நகரங்களை இணைக்கும் அதிக போக்குவரத்து கொண்ட ரயில்வே தடங்கள் (எச்டிஎன்) 11,051 கிலோ மீட்டர் தூரத்துக்கு உள்ளது. இது தான் ரயில்வேயின் முதுகெலும்பாக உள்ளது. ஒட்டுமொத்த ரயில்வே நெட்வொர்க்கில் 16 சதவீத பங்கை இந்த 4 நகரங்களை இணைக்கும் ரயில் பாதைகள் வழங்குகின்றன. இந்தப் பாதைகள் மூலம் 41 சதவீத ரயில் போக்குவரத்து நடைபெறுகிறது.

டெல்லி - ஹவுரா (1,422 கிலோ மீட்டர்), ஹவுரா - மும்பை (2,039 கிலோ மீட்டர்), டெல்லி - மும்பை (1,321 கிலோ மீட்டர்), டெல்லி - குவாஹாட்டி (1,875 கிலோ மீட்டர்), டெல்லி - சென்னை (2,041 கிலோ மீட்டர்), ஹவுரா - சென்னை (1,117 கிலோ மீட்டர்), மும்பை - சென்னை (1,238 கிலோ மீட்டர்) ஆகிய 7 பாதைகள் அதிக ரயில் போக்குவரத்துப் பாதைகளாக கண்டறியப்பட்டுள்ளன.

இந்த தடங்களில் தான் தற்போது, 5, 6-வது ரயில் பாதைகளை அமைக்க மத்திய ரயில்வே அமைச்சகம் முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக ரயில்வே மண்டல மூத்த அதிகாரிகளை ரயில்வே வாரிய அதிகாரிகள் அழைத்து ஆலோசனை நடத்தி உள்ளனர்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் இரட்டை ரயில் பாதைகள், மல்ட்டி டிராக்கிங், 5, 6-வது ரயில் பாதைகள் அமைத்தல் போன்றவை குறித்து விவாதிக்கப்பட்டுள்ளன. மேலும் ரயில்வே மண்டலங்கள் சார்பாக திட்ட அறிக்கையையும் தயாரித்துத் தருமாறு ரயில்வே வாரியம் கேட்டுக்கொண்டுள்ளது.

# மேற்கு ஆசிய போரால் விமானங்கள் ரத்து! துபையில் நூற்றுக்கணக்கான இந்தியர்கள் பரிதவிப்பு!

**புதுடெல்லி, மார்ச் 3:**

மேற்கு ஆசியாவில் ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் தாக்குதலால் போர் மூண்டு சர்வதேச விமானங்கள் ரத்து செய்யப்பட்டதால், ஐக்கிய அரபு அமீரகத்தின் துபை நகரில் நூற்றுக்கணக்கான இந்தியர்கள் சிக்கித் தவித்து வருகின்றனர்.

ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து ஐக்கிய அரபு அமீரகம், கத்தார், குவைத், பஹ்ரைன், ஜோர்டான் உள்ளிட்ட நாடுகளில் உள்ள இஸ்ரேல், அமெரிக்க ராணுவ தளங்களை குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது.

இதன் காரணமாக ஐக்கிய அரபு அமீரகத்தில் விமானங்கள் ரத்து செய்யப்பட்டதால், துபையில் பேட்மிண்டன் வீராங்கனை பி.வி.சிந்து, கர்நாடக மாநிலத்தின் மதச்சார்பற்ற ஜனதா தள எம்எல்சி போஜே கௌடா மற்றும் அவரின் குடும்பத்தினர், வங்காள நடிகை சுபஸ்ரீ கங்குலி மற்றும் அவரின் மகன், சுற்றுலாப் பயணிகள், மாணவர்கள் உள்ளிட்டோர் பரிதவித்து வருகின்றனர்.

ஐக்கிய அரபு அமீரகத்துக்கு வணிக மற்றும் சுற்றுலா காரணங்களுக்காக மத்திய பிரதேசத்தை சேர்ந்த 2 முன்னாள் எம்எல்ஏக்கள் உள்பட 700-க்கும் மேற்பட்டோர் சென்றனர். அவர்கள் இந்தியா திரும்ப முடியாமல் பரிதவித்து வருவதாக இந்திய பயண முகவர்கள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

2 முன்னாள் எம்எல்ஏக்களில் ஒருவரான பாஜக பிரமுகர் சஞ்சய் சுக்லா சமூக ஊடகத்தில் வெளியிட்ட காணொலியில், அவர் இருந்த இடத்தில் இருந்து சில கி.மீ.கள் தொலைவில் குண்டுவெடித்து புகை எழும் காட்சி இடம்பெற்றுள்ளது. அத்துடன் அவர் வெளியிட்ட பதிவில்,

'ஐக்கிய அரபு அமீரகத்தில் சூழல் மோசமடைந்துள்ளது. அனைத்துப் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டுள்ளன. நாங்கள் பாதுகாப்பாக இந்தியா திரும்ப பிரதமர் மோடி ஆவன செய்ய வேண்டும்' என்றார்.

# "நியாயமான தீர்ப்புகளை வழங்கினால் மட்டுமே நீதிமன்றங்கள் மீது நம்பிக்கை கூடும்" - உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த்



**திருப்பதி, மார்ச் 3:**

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் நேற்று முன்தினம் இரவு திருமலைக்கு வந்தார். அவரை திருமலை திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவர் பிஆர் நாயுடு, நிர்வாக அதிகாரி எம். ரவிச்சந்திரா உட்பட பல உயர் அதிகாரிகள் வரவேற்றனர்.

பின்னர், இரவு திருமலையில் தங்கிய தலைமை நீதிபதி சூர்ய காந்த், நேற்று காலை தனது குடும்பத்தாருடன் ஏழுமலையானை தரிசனம் செய்தார்.

தரிசனம் செய்த பின்னர், ரங்க நாயக மண்டபத்தில் தலைமை நீதிபதிக்கு சேஷ வஸ்திரம் அணிவித்து, வேத பண்டிதர்களால் ஆசி வழங்கப்பட்டது. அதன் பின்னர், தலைமை நீதிபதிக்கு தீர்த்த பிரசாதங்கள் வழங்கி கவுரவிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், அறங்காவலர் பிஆர் நாயுடு, நிர்வாக அதிகாரி எம். ரவிச்சந்திரா, கூடுதல் நிர்வாக அதிகாரி வெங்கைய்ய சவுத்ரி மற்றும் உயர் நீதிமன்ற மற்றும் மாவட்ட நீதிபதிகள் பங்கேற்றனர்.

இதைத் தொடர்ந்து, திருப்பதியில் தாமினேடு பகுதியில் புதிதாகக் கட்டப்பட உள்ள 16 கட்டிடங்கள் கொண்ட திருப்பதி மாவட்ட புதிய மாவட்ட நீதிமன்றத்துக்கு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த் அடிக்கல் நாட்டினார்.

பின்னர் தலைமை நீதிபதி பேசும் போது, "நீதிமன்றங்களில் இரு தரப்பு வாதங்களும் சரியான முறைப்படி இருத்தல் அவசியம்.

அப்படி இருந்தால் தான் நீதிபதியும் சரியான தீர்ப்பை வழங்க முடியும். அப்படி நியாமான தீர்ப்புகள் வழங்கப்படும் பட்சத்தில் தான் மக்களுக்கு சட்டம், நீதிமன்றங்கள், நீதிபதிகள் மீது நம்பிக்கை ஏற்படும்" என்றார்.

இந்நிகழ்ச்சியில் ஆந்திர மாநில உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி தீரஜ் சிங் தாக்குர் உட்பட பல்வேறு மாவட்ட நீதிபதிகள், வழக்கறிஞர்கள் பங்கேற்றனர்.

# பிப்ரவரி ஜிஎஸ்டி வசூல் 8.1 சதவீதம் அதிகரித்து ரூ.1.83 லட்சம் கோடியைத் தாண்டியது!

**புதுடெல்லி, மார்ச் 3:**

மத்திய அரசு ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட தரவுகளில், கடந்த 2025 பிப்ரவரியில் மொத்த ஜிஎஸ்டி வசூல் ரூ.1,83,609 கோடி. இதில் உள்நாட்டு பரிவர்த்தனைகள் மூலம் கிடைக்கப் பெற்ற மொத்த வருவாய் 5.3 சதவீதம் உயர்ந்து, ரூ.1.36 லட்சம் கோடியாகவும், சரக்கு இறக்குமதி மூலம் கிடைக்கப் பெற்ற வருவாய் 17.2 சதவீதம் உயர்ந்து ரூ.47,837 கோடியாக உள்ளது. இது இறக்குமதிகள் மூலம் கிடைத்த வருவாய் அதிகரிப்பு மற்றும் உள்நாட்டு விற்பனையில் முன்னேற்றம் காரணமாக நிகழ்ந்தது.

திருப்பியளிக்கப்பட்ட மொத்த தொகை 10.2 சதவீத உயர்ந்து ரூ.22,595 கோடியாகவும், மொத்த நிகர ஜிஎஸ்டி வருவாய் 7.9 சதவீதம் உயர்ந்து, ரூ.1.61 லட்சம் கோடியாக உள்ளது. கடந்த ஆண்டு செப்டம்பரில் ஜிஎஸ்டி விகிதங்கள் 5% மற்றும் 18% என இரண்டாக குறைக்கப்பட்டது. சில மிக ஆடம்பர பொருட்கள் மற்றும் புகையிலை பொருட்களுக்கு அதிகபட்சமாக 40% ஆக அதிகரிப்பட்டது. இதனால் சுமார் 375 பொருள்களுக்கான விலை ஆரம்பத்தில் குறைந்து ரூ.1.89 லட்சம் கோடி வசூலானது. அக்டோபரில் ரூ.1.96 லட்சம் கோடி, நவம்பரில் ரூ.1.70 லட்சம் கோடி, டிசம்பரில் ரூ.1.74 லட்சம் கோடி ஜிஎஸ்டி வசூலானது. நடப்பு நிதியாண்டின் ஏப்ரல் முதல் பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் மொத்த ஜிஎஸ்டி வசூல் ரூ.20.27 லட்சம் கோடியாகும். முந்தைய நிதியாண்டின் இதே காலகட்டத்தை ஒப்பிடுகையில் 8.3 சதவீத அதிகரித்து ரூ.18.71 லட்சம் கோடி. 2024-25 நிதியாண்டில் முன்னெப்போதும் இல்லாத அளவில் மொத்தம் ரூ.22.08 லட்சம் கோடி ஜிஎஸ்டி வசூலானது. இந்த ஜிஎஸ்டி வசூல் சுழற்சி ஏற்ற இறக்கங்களைவிட கட்டமைப்பு ஸ்திரத்தன்மையை பிரதிபலிக்கிறது.

# சத்தீஸ்கர்: 15 நக்ஸல்கள் சரண்! ராய்பூரில் நக்ஸல் தீவிரவாதம் முடிவுக்கு வந்தது!!

**புதுடெல்லி, மார்ச் 3:**

சத்தீஸ்கர் காவல் துறை அதிகாரிகள் கூறியதாவது: இந்திய கம்யூனிஸ்ட் (மாவோயிஸ்ட்) கட்சியின் பலாங்கீர்-பார்கர்-மஹாசாமுந்த் (பிபிஎம்) பிரிவைச் சேர்ந்த நக்ஸல் தீவிரவாத முக்கியத் தலைவரான விகாஸ், 9 பெண் நக்ஸல்கள் உள்பட 15 பேர் மஹாசாமுந்த் மாவட்ட காவல் துறை தலைமையகத்தில் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு சனிக்கிழமை சரணடைந்தனர்.

ஓராண்டுக்கு முன் சத்தீஸ்கரின் ராய்பூர் காவல் எல்லை மற்றும் ஒடிஸாவின் சம்பல்பூர் காவல் எல்லைப் பகுதிகளில் நக்ஸல் தீவிரவாதிகளின் இரு பிரிவுகளும் ஏழு பகுதி குழுக்களும் செயல்பாட்டில் இருந்தன. ஆனால் தற்போது ராய்பூர்-சம்பல்பூர் பகுதி நக்ஸல் தீவிரவாதமற்ற இடமாக மாறிவிட்டது. இம்மாத இறுதியில் நக்ஸல் தீவிரவாதத்தை நாடு முழுவதும் முற்றிலுமாக ஒழிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், ராய்பூர் இதன் தொடக்கப்புள்ளியாக அமைந்துள்ளது. கடந்த இரு ஆண்டுகளில் சத்தீஸ்கரில் 532 நக்ஸல்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். 2,700 பேர் சரணடைந்தனர். 2,000-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றனர்.

# யுஏஇ அதிபருடன் பிரதமர் மோடி பேச்சு: தாக்குதலுக்கு கண்டனம்!

**புதுடெல்லி, மார்ச் 3:**

ஐக்கிய அரபு அமீரக (யுஇஏ) அதிபர் ஷேக் முகமது பின் ஸயத் அல்நஹ்யானிடம் பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசி வாயிலாக ஞாயிற்றுக்கிழமை பேசினார். அப்போது யுஇஏ மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்த அவர், தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவித்தார். இந்தக் கடினமான சூழலில் யுஏஇயுடன் இந்தியா துணை நிற்பதாகவும் அங்கு வசிக்கும் இந்தியர்களுக்கு பாதுகாப்பு அளித்து வருவதற்கு நன்றி தெரிவித்தார். மேலும், மோதலை கைவிட்டு, பிராந்திய அமைதி, பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதிபடுத்த இந்தியா ஆதரவளிப்பதாக தனது எக்ஸ் வலைதளப் பதிவில் பிரதமர் மோடி குறிப்பிட்டார். முன்னதாக, மத்திய கிழக்கு நிலவரம் குறித்து பிரதமர் மோடி தலைமையில் பாதுகாப்புக்கான மத்திய அமைச்சரவைக் குழுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்றது. இந்தக் குழுவில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், உள்துறை அமைச்சர் அமித் ஷா, வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர்.

மத்திய கிழக்கில் நிலவும் பதற்றம் காரணமாக பல்வேறு விமானங்கள் ரத்து செய்யப்பட்ட நிலையில் அங்கு சிக்கியுள்ள இந்தியர்களுக்கு உதவ மத்திய விமானப் போக்குவரத்து துறையின் கட்டுப்பாட்டு அறை தீவிரமாகப் பணியாற்றி வருகிறது. ஏற்கெனவே, மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளில் அமைந்துள்ள இந்திய தூதரகங்கள் உதவி எண்களை அறிவித்துள்ளன. அத்துடன் 011-24604283, 011-24632987 ஆகிய எண்களையும் இந்தியப் பயணிகள் தொடர்புகொள்ளலாம். இதுதவிர ஏர்சேவா வலைதளம் மற்றும் சமூக ஊடகப் பக்கங்களிலும் பயணிகள் உதவிகோரலாம் என அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# துபையில் சிக்கியவர்களுடன் காணொலியில் பேசிய சித்தராமையா!

**பெங்களூரு, மார்ச் 3:**

கர்நாடகத்தின் பல்லாரி தொகுதி எம்.எல்.ஏ. உள்பட அப்பகுதியைச் சேர்ந்த 32 பேர் துபையில் சிக்கியுள்ளனர். அவர்களுக்கு நம்பிக்கை அளிக்கும் விதமாக முதல்வர் சித்தராமையா விடியோ அழைப்பில் உரையாடினார்.

இந்நிலையில் இது குறித்து தனது எக்ஸ் தளப் பக்கத்தில் முதல்வர் சித்தராமையா பதிவிட்டுள்ளதாவது:

"ஈரான் - இஸ்ரேல் இடையே பதற்றமான சூழல் நிலவிவரும் நிலையில், மத்திய கிழக்கில் உள்ள கர்நாடகத்தைச் சேர்ந்தவர்களின் பாதுகாப்பு மற்றும் நலனை உறுதி செய்வதில் கர்நாடக அரசு மும்முரமாக செயல்பட்டு வருகிறது. குறிப்பாக மத்திய கிழக்கில் ஐக்கிய அரபு அமீரகம், ஈரான், இஸ்ரேல் மற்றும் கத்தார் நாடுகளில் உள்ளவர்களுடன் தொடர்புகொண்டு அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்கிறோம்" எனப் பதிவிட்டுள்ளார். புது தில்லியில் உள்ள குடியுரிமை ஆணையருடன் நான் ஆலோசனை நடத்தி, நமது மக்களைப் பாதுகாக்கத் தேவையான மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளேன் எனப் பதிவிட்டுள்ளார்.

# அமெரிக்க ஏகாதிபத்தியம் இது..! கமேனி கொலைக்கு பினராயி விஜயன் கடும் கண்டனம்

**திருவனந்தபுரம், மார்ச் 3:**

ஈரான் போரில் உச்சகட்ட பதற்றமாக, இஸ்ரேல் - அமெரிக்க படையின் தாக்குதலில் ஈரானின் தலைமை மதகுரு அயதுல்லா கமேனி (86) கொல்லப்பட்டார். இதனைத்தொடர்ந்து, அமெரிக்காவுக்கு ஈரான் தக்க பதிலடி அளிக்கும் என்று சூளுரைத்துள்ளது. இதையடுத்து, மத்திய கிழக்கில் நிலவி வரும் பதற்றமான சூழலில், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே இப்போது பூதாகரமாகப் போர் வெடித்துள்ளது. இதனால் ஈரானில் பதற்றமான சூழல் நிலவுகிறது. இந்நிலையில், ஈரானில் நடத்தப்பட்ட தாக்குதல்களைக் கண்டித்து, பிரதமர் நரேந்திர மோடிக்கு கேரள முதல்வர் பினராயி விஜயன் (மார்ச் 1) எழுதியுள்ள கடிதத்தில், 'இவ்விவகாரத்தில் அரசு உடனடியாகத் தலையிட வலியுறுத்தியிருப்பதாகக்' குறிப்பிட்டுள்ளார். மேலும், அவர் தெரிவித்திருப்பதாவது : "வளைகுடா நாடுகளில் உள்ள எங்களது (கேரள) ஆயிரக்கணக்கான சகோதர, சகோதரிகள் மிகப்பெரியதொரு பாதுகாப்பற்ற சூழலில் இருக்கின்றனர். இவையனைத்தும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கொடுஞ்செயல்களால் உருவாக்கப்பட்டிருப்பவையே. இத்தருணத்தில் நான் சொல்ல நினைப்பது இதைத்தான் - 'அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இச்செயல்களுக்கு எதிராக கடும் கண்டனத்தை நாம் கூட்டாக வெளிப்படுத்த வேண்டும்'" என்று பினராயி விஜயன் தெரிவித்தார்.




# வருவாய்த் துறை ஊழியர்களின் வேலைநிறுத்தம்: நெல் விற்க முடியாமல் விவசாயிகள் தவிப்பு



**சென்னை, மார்ச்.03:** வருவாய்த் துறை ஊழியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக, விவசாயிகள் விளைவித்த நெல்லை விற்பனை செய்ய முடியாமல் தவித்து வருவதாக தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் பி.எஸ் .மாசிலாமணி குற்றம்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: விவசாயிகள் தாங்கள் விளைவித்த நெல் மூட்டைகளை அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்வதற்கு, அந்தந்த கிராம நிர்வாக அலுவலர்கள் வழங்கும் அடையாள சான்று கட்டாயமாகும்.

இந்தச் சான்று இருந்தால் மட்டுமே கொள்முதல் நிலையங்களில் நெல்லை பதிவேற்றம் செய்ய முடியும். இந்நிலையில், வருவாய்த்துறை ஊழியர் சங்கங்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 4 நாட்களாக வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன.

இப்போராட்டத்தில் கிராம நிர்வாக அலுவலர்களும் பங்கேற்றுள்ளதால், விவசாயிகளுக்கு தேவையான சான்றுகளை பெறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால், பல மாவட்டங்களில் நெல்லை விற்க முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

ஏற்கெனவே அறுவடை செய்த நெல் மூட்டைகளை விற்பனை செய்ய முடியாமல் கொள்முதல் நிலையங்களில் அடுக்கி வைத்துள்ளதால், அவற்றைப் பாதுகாக்கும் கூடுதல் செலவை விவசாயிகள் ஏற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

அதிகாரிகள் மெத்தனம்

அறுவடை செய்யும் நிலையில் பயிர்கள் இருந்தாலும், மேற்கொண்டு அறுவடை செய்த நெல் மூட்டைகளை பாதுகாக்க வேண்டுமே என்கிற அச்சத்தில் அறுவடையும் தேக்கம் அடைந்துள்ளது.

இத்தகைய சூழலை கணித்து தகுந்த முன்னேற்பாடுகளை செய்திருக்க வேண்டிய அதிகாரிகளின் மெத்தனப் போக்கால் விவசாயிகள் அவதியடைந்து வருகின்றனர்.

இவ்விவகாரத்தில் முதல்வர் தலையிட்டு, சான்றிதழ் சிக்கலின்றி நெல் கொள்முதலை தடையின்றி மேற்கொள்ள உரிய மாற்று ஏற்பாடுகளை செய்ய வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அரசு பல் மருத்துவர்களுக்கு பணிச்சுமை அதிகரிப்பு: நோயாளிகள் அவதியடைவதாக குற்றச்சாட்டு

**சென்னை, மார்ச்.03:** தமிழகத்தில் சென்னை, புதுக்கோட்டை, சிதம்பரத்தில் தலா ஓர் அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை செயல்பட்டு வருகின்றன. இவை தவிர அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மாவட்ட, தாலுகா, மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் மருத்துவப் பிரிவுகள் உள்ளன.

மொத்தம் 565 அரசு பல் மருத்துவர்கள் பணியாற்றி வருகின்றனர். மேலும் 400-க்கும் மேற்பட்ட பல் மருத்துவர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வருகின்றனர். சிறப்பு தேர்வு மூலம் பணிநிரந்தரம் செய்யப்படாததால், அவர்கள் 15 ஆண்டுகளுக்கு மேலாக குறைந்த ஊதியத்தில் பணியாற்றி வருகின்றனர்.

மற்றொரு புறம், அரசு பல் மருத்துவர்களுக்கு 2014 முதல் பதவி உயர்வு கலந்தாய்வு நடத்தப்படவில்லை. சென்னையில் உள்ள தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 5 துறைகளுக்கு மட்டும் 2023 வரை மட்டும் பதவி உயர்வு கலந்தாய்வு நடத்தப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் ஏராளமான உதவி, இணை பேராசிரியர்கள், பேராசிரியர்கள் மற்றும் பல் மருத்துவர் பணியிடங்கள் காலியாக உள்ளன. 10 ஆண்டுகளுக்கும் மேலாக புதிதாக பல் மருத்துவர்களுக்கு பணி நியமனம் வழங்கப்படவில்லை.

கீழ்ப்பாக்கம், தருமபுரி, சிவகங்கை உள்ளிட்ட 5 அரசு மருத்துவக் கல்லூரிகளிலிருந்து 5 பல் மருத்துவர்கள் மீள் பணி நியமனம் மூலம் தாம்பரம் சாட்டிலைட் பல் மருத்துவமனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். திருவாரூர் மற்றும் ராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரிகளில் பல் மருத்துவத் துறை மூடப்பட்டுள்ளது.

நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், பணியிடங்கள் குறைப்பு, புதிய நியமனங்கள் இல்லாததால் பல் மருத்துவர்களுக்கு பணிச்சுமை அதிகரித்துள்ளது. இதனால் நோயாளிகளும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இது தொடர்பாக அரசு மருத்துவர்களுக்கான சட்டப் போராட்டக் குழு தலைவர் மருத்துவர் எஸ்.பெருமாள் பிள்ளை கூறியதாவது: அரசு மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகள் எண்ணிக்கை 3 மடங்காக அதிகரித்துள்ள நிலையில், பல் மருத்துவர் பணியிடங்களை குறைப்பது எந்த வகையில் நியாயம்.

அதேபோல், அரசாணை 293 மூலம் தரப்படும் ஊதியப் படிகள் இதுவரை பல் மருத்துவர்களுக்கு மட்டும் தரப்படவில்லை. ஏற்கெனவே நாட்டிலேயே தமிழகத்தில்தான் அரசு மருத்துவர்கள் மற்றும் பல் மருத்துவர்களுக்கு மிகவும் குறைவான ஊதியம் தரப்படுகிறது.

அரசு பல் மருத்துவர்கள் பணி ஓய்வு பெற்ற பிறகு, அவர்களுக்கு பணி நீட்டிப்பு செய்வதை ரத்து செய்ய வேண்டும். பல் மருத்துவர்களுக்கு பதவி உயர்வு கலந்தாய்வு நடத்த வேண்டும்.

மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் புதிய பணியிடங்களில் பல் மருத்துவர்களை நியமிக்க வேண்டும். கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனை உட்பட குறைக்கப்பட்ட பல் மருத்துவர் பணியிடங்களை மீண்டும் உருவாக்க வேண்டும்.

அரசு மருத்துவர்களுக்கு அரசாணை 293-ன் மூலம் தரப்பட்ட ஊதியப்படிகளை அனைத்து பல் மருத்துவர்களுக்கும் வழங்க வேண்டும். அனைத்து அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் மருத்துவர்கள் பணியிடங்களை உருவாக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# வளைகுடா நாடுகளில் போர் பதற்றம்: தமிழர்களுக்காக அவசர உதவி எண்கள் அறிவிப்பு

**சென்னை, மார்ச்.03:** வளைகுடா நாடுகளில் நிலவி வரும் போர் பதற்ற சூழலை கருத்தில்கொண்டு, அங்குள்ள தமிழர்களின் அவசர உதவிக்காக உதவி எண்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்ட சமூக வலைதள பதிவில் கூறியிருப்பதாவது: அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் நாடுகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள போர் காரணமாக, ஈரான் மற்றும் அதைச் சுற்றியுள்ள ஐக்கிய அரபு அமீரகம், குவைத், பஹ்ரைன், ஓமன், சவுதி அரேபியா, கத்தார் உள்ளிட்ட வளைகுடாநாடுகளில் பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது.

அங்குள்ள இந்தியர்களின் பாதுகாப்பு கருதி, தேவையற்ற பயணங்களைத் தவிர்க்கவும், இந்திய தூதரகம் வழங்கும் அறிவுறுத்தல்களை முறையாக பின்பற்றி வீடுகளிலேயே பாதுகாப்பாக இருக்குமாறும் இந்திய அரசு கேட்டு கொண்டுள்ளது.

தமிழக முதல்வர் என்ற முறையில், வளைகுடா நாடுகளில் வசித்து வரும் நம் தமிழர்களின் பாதுகாப்பு குறித்து மிகுந்த கவலை அடைந்துள்ளேன். அவர்களின் நிலைமையை உடனுக்குடன் கண்காணித்து, அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்க அயலக தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறைக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அங்குள்ள தமிழர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க தமிழக அரசு தயார் நிலையில் உள்ளது.

இதற்காக டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் பிரத்யேகக் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு, நிலைமை தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள தமிழர்கள் அல்லது தமிழகத்தில் உள்ள அவர்களது குடும்பத்தினர் ஏதேனும் அவசர உதவி தேவைப்பட்டால், தமிழக அரசின் 24 மணி நேர கட்டணமில்லா உதவி எண்களைத் தொடர்பு கொள்ளலாம்.

அதன்படி, இந்தியாவுக்குள் இருப்பவர்கள் 1800 309 3793 என்ற எண்ணையும், வெளிநாடுகளில் இருப்பவர்கள் +91 80 6900 9900 மற்றும் +91 80 6900 9901 ஆகிய எண்களையும் தொடர்பு கொள்ளலாம். மேலும், டெல்லி கட்டுப்பாட்டு அறையை 011-24193300 மற்றும் 92895 16712 (வாட்ஸ்-அப்) ஆகிய எண்கள் மூலம் தொடர்பு கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் வருகிற 7-ந்தேதி வரை லேசான மழைக்கு வாய்ப்பு- வானிலை ஆய்வு மையம்



**சென்னை, மார்ச்.03:** சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

குமரிக்கடல் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

குமரிக்கடல் பகுதிகளிலிருந்து லட்சத்தீவு பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இன்று முதல் நாளை மறுநாள் வரை மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

4-ந்தேதி தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

5 மற்றும் 6-ந்தேதிகளில் மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

7-ந்தேதி தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தமிழக உள் மாவட்டங்களில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

இதற்கிடையே இன்று முதல் 5-ந்தேதி வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பிலிருந்து, இயல்பை விட 2-3° செல்சியஸ் வரை அதிகமாக இருக்கக்கூடும்.


சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 33-34° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 23-24° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 33-34° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 22-23 செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

# இஸ்ரேல் - ஈரான் போர்: சென்னையில் 2-வது நாளாக 33 விமானங்களின் சேவை ரத்து

**சென்னை, மார்ச்.03:** இஸ்ரேல் - ஈரான் இடையே போர் நடந்து வருவதால், மத்திய கிழக்கு பகுதிகளில் விமான சேவைகள் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளன.




நேற்று முன்தினம் சென்னை விமான நிலையத்துக்கு துபாய், அபுதாபி, பஹ்ரைன், மஸ்கட் ஆகிய நாடுகளுக்கு இயக்கப்படும் 16 வருகை விமானங்களும், புறப்பாடு விமானங்கள் 12 என, மொத்தம் 28 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.

2-ம் நாளான நேற்று சென்னையில் இருந்து துபாய், அபுதாபி, சார்ஜா, பஹ்ரைன், குவைத், மஸ்கட் உள்ளிட்ட 17 புறப்பாடு விமானங்கள், இந்த நாடுகளில் இருந்து சென்னைக்கு வரவேண்டிய 16 வருகை விமானங்கள் மொத்தம் 33 விமானங்கள் ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டன.

லண்டன், அமெரிக்கா, ஜெர்மன் உள்ளிட்ட நாடுகளில் இருந்து சென்னை வரும் பல்வேறு விமானங்கள் ஈரான், மத்திய கிழக்கு நாடுகளின் வான்வெளிகள் மூடப்பட்டுள்ளதால், மாற்று பாதைகளில் விமானங்கள் சுற்றி வந்து மீண்டும் புறப்பட்டு செல்வதற்கு பல மணி நேரம் தாமதம் ஏற்படலாம் என்பதால், அந்த விமானங்கள் ரத்து செய்யப்படவும் வாய்ப்புள்ளது.

அதனால், பயணிகள் தங்களுடைய விமான நிறுவனத்தை தொடர்பு கொண்டு தகவலை தெரிந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# மார்ச் முதல் மே வரை வெப்ப அலை அதிகரிக்கும்: வானிலை ஆய்வு மையம்




**சென்னை, மார்ச்.03:** தமிழக வட மாவட்டங்கள் மற்றும் கடலோர மாவட்டங்களில் மார்ச் முதல் மே மாதம் வரை வெப்ப அலை அதிகரிக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மார்ச் முதல் மே மாதம் வரையிலான வெப்பநிலை மற்றும் மழை தொடர்பான வானிலை கணிப்பை இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது: தென்கிழக்கு தீபகற்பத்தின் (வட தமிழகம், கடலோர தமிழகம்) பல பகுதிகளிலும், வடமேற்கு மற்றும் மேற்கு மத்திய இந்தியாவின் சில பகுதிகளிலும் மார்ச் முதல் மே 2026 வரையிலான காலகட்டத்தில் இயல்பை விட அதிகமான வெப்ப அலை நாட்கள் இருக்க வாய்ப்புள்ளது.


குறிப்பாக அதிகபட்சமாக 15 நாட்கள் வரை வழக்கத்தை விட அதிகமான வெப்ப அலை நாட்கள் நிலவ வாய்ப்புள்ளது. எனவே இந்த காலகட்டத்தில் போதுமான நீரை அருந்த வேண்டும். அதிக வெயில் இருக்கும் நேரத்தில் வெளியில் செல்வதை தவிர்க்க வேண்டும். வெப்ப அலையில் எளிதில் பாதிக்கப்படும் மக்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அவர்களை பாதுகாக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மழை வாய்ப்பு குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: குமரிக்கடல் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. குமரிக்கடல் பகுதிகளிலிருந்து லட்சத்தீவு பகுதிகள் வரை ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக நாளையும் (மார்ச் 2), நாளை மறுதினமும் மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். 4-ம் தேதி தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களிலும், 5, 6 தேதிகளில் மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், 7-ம் தேதி தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தமிழக உள் மாவட்டங்களில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்கள், தமிழக கடலோர பகுதிகளில் ஓரிரு இடங்களில் இன்றும், நாளையும் அதிகாலை வேளையில் லேசான பனிமூட்டம் காணப்படும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# ஊட்டி பழைய ரேஸ்கோர்ஸ் மைதானத்தின் புல்வெளிகளில் முகாமிடும் வெள்ளை நாரைகள்



**ஊட்டி, மார்ச்.03:** ஊட்டியில் உள்ள பழைய ரேஸ்கோர்ஸ் மைதான புல்வெளிகளில் முகாமிடும் வெள்ளை நாரைகள் பார்வையாளர்களை கவர்ந்து வருகின்றனர். நீலகிரி மாவட்டம், ஊட்டி நகரின் மையப்பகுதியில் ரேஸ்கோர்ஸ் மைதானம் அமைந்துள்ளது.

நகரின் முக்கிய அடையாளங்களில் ஒன்றாக இந்த ரேஸ்கோர்ஸ் மைதானம் விளங்கி வருகிறது. காலை நேரங்களில் இந்த மைதான புல்வெளிகளில் வெள்ளை நாரைகள் கூட்டம் கூட்டமாக முகாமிடுவது வாடிக்கையாக உள்ளது.

இப்பகுதியில் இயற்கையாக உருவாகியுள்ள சதுப்பு நிலங்களும்,ஈரப் புல்வெளிகளும் இந்நாரைகளுக்கான சிறந்த முகாமிடம் இடமாக மாறியுள்ளது.கூட்டமாகச் சேர்ந்த அவை, தங்களுக்கே உரிய ஒலிகளால் ஒன்றோடு ஒன்று உரையாடிக் கொண்டிருக்கும் காட்சி, பார்வையாளர்களை சில நிமிடங்கள் நிறுத்தி விடும் அளவிற்கு மனதை கவர்கிறது.ரேஸ்கோர்ஸ் புல்வெளிப் பகுதிகளில் காணப்படும் புழு, பூச்சிகள் மற்றும் சிறு உயிரினங்களே இந்நாரைகளின் முக்கிய உணவாக இருக்கின்றன.

காலை நேரங்களில் நடைபயிற்சி செல்லும் உள்ளூர் மக்களும், ஊட்டிக்கு வரக்கூடிய சுற்றுலா பயணிகளும் இவற்றை பார்த்து மகிழ்கின்றனர். இது குறித்து பறவைகள் ஆர்வலர்கள் கூறுகையில், "நவம்பர் முதல் மார்ச் வரையிலான குளிர் காலங்களில் வடமாநிலங்களில் இருந்து பல்வேறு வகை பறவையினங்கள் நீலகிரிக்கு வலசை வரும்.கிரீன் லீப் வாப்லர் போன்ற சில பறவையினங்கள் பனிக்காலத்தில் இமாலய பகுதிகளில் இருந்து வருகின்றன.

இதுதவிர சதுப்பு நிலங்கள் மற்றும் நீர் நிலைகளில் காணக்கூடிய சாம்பர் நாரை,ஸ்பாட் பில் டக், கேட்டில் ஈகிரட், காமன் கூட் போன்ற நீர் பறவைகளும் அதிகளவு வந்துள்ளன. இவைகள் ஊட்டி ஏரி, கிளன்மார்கன், பைக்காரா அணை, மாயார் போன்ற நீர் நிலைகள் மற்றும் முதுமலை புலிகள் காப்பகத்திற்குள் காணப்படும் சிறு நீர் குட்டைகள் போன்றவற்றில் காணப்படுகிறது" என்றனர்.

# போச்சம்பள்ளி வாரச்சந்தையில் வரத்து அதிகரிப்பால் துவரை விலை சரிவு



**போச்சம்பள்ளி, மார்ச் 3:** போச்சம்பள்ளிவாரச்சந்தையில் துவரை வரத்து அதிகரித்ததால், விலை சரிந்தது. இதனை பொதுமக்கள் போட்டி போட்டு வாங்கிச் சென்றனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மானாவாரியாகவும், ஊடு பயிராகவும் பயறு வகை பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர்.

போச்சம்பள்ளி, மத்தூர், ஒலப்பட்டி, ஆனந்தூர், சாமல்பட்டி, கொடமாண்டப்பட்டி, பாளேத்தோட்டம், குள்ளம்பட்டி, சந்தம்பட்டி உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் விவசாயிகள் அதிகளவில் துவரை சாகுபடி செய்துள்ளனர்.

இங்கு விளையும் துவரை, போச்சம்பள்ளி வாரச்சந்தையில் விவசாயிகள் விற்பனை செய்கின்றனர். இதனால் விவசாயிகளுக்கு நல்ல வருவாய் கிடைத்து வருகிறது.

நடப்பாண்டு துவரை விளைச்சல் குறைவால், விவசாயிகள் வேதனை அடைந்தனர். சில வாரங்களுக்கு முன், ஒரு கிலோ துவரை ரூ.110 முதல் ரூ.120வரை விற்பனை செய்யப்பட்டது.

நேற்று கூடிய வாரச்சந்தையில் வரத்து அதிகரித்தது. இதனால், ஒரு கிலோ துவரை ரூ.85 முதல் ரூ.100 வரை விற்பனை செய்யப்பட்டது.கடந்தாண்டை காட்டிலும், நேற்று கூடிய சந்தையில், சுமார் 25 டன் துவரை விற்பனையானது.

விலை குறைந்ததால் பொதுமக்கள் ஆர்வத்துடன் போட்டி போட்டு வாங்கிச் சென்றனர். இது குறித்து விவசாய சங்க தலைவர் வரதராஜன் கூறுகையில், 'துவரை சாகுபடி செய்ய, ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் வரை செலவாகிறது. ஏக்கருக்கு 600 கிலோ வரை மகசூல் கிடைக்கும்.

நடப்பாண்டு கடும் பனிப்பொழிவு காரணமாக, 80 சதவீத பூக்கள் உதிர்ந்து, துவரை விளைச்சல் பாதிக்கப்பட்டு, ஏக்கருக்கு 100 கிலோ முதல் 200 கிலோ வரை மட்டுமே மகசூல் கிடைத்தது. கடந்த சில வாரங்களுக்கு முன், ஒரு கிலோ துவரை ரூ.120 வரை விற்பனை செய்யப்பட்டது.

வரத்து அதிகரித்து வரும் நிலையில், நேற்று சந்தையில் கிலோ துவரை ரூ.100க்கு விற்பனையானது. வேறு வழியின்றி வந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டி உள்ளது,' என்றார்.

# உடுமலை அருகே கி.பி. 12ம் நூற்றாண்டை சேர்ந்த தன் தலையை தானே அறுத்து பலியிட்ட திருநங்கை தற்பலி சிற்பம் கண்டுபிடிப்பு

**உடுமலை, மார்ச் 3:** உடுமலை அருகே கி.பி. 12ம் நூற்றாண்டை சேர்ந்த திருநங்கை பலி சிற்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து தொல்லியல் ஆய்வாளர் நாராயணமூர்த்தி கூறியதாவது: திருப்பூர் மாவட்டம் கொழுமத்துக்கு கிழக்கே குதிரையாற்றின் கரையில் ஒரு பாழடைந்த கோயில் உள்ளது. இக்கோயிலை ஆய்வு செய்த போது இந்த பலி சிற்பம் கண்டுபிடிக்கப்பட்டது.

அலங்காரங்களுடன் உள்ள ஒரு பெண்மணி (திருநங்கை) தன்தலையை தானே அறுத்துக் கொள்வது போன்று இச்சிற்பம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வகை சிற்பங்களுக்கு நவகண்ட சிற்பங்கள் அல்லது தற்பலிச்சிற்பங்கள் என்பது பெயர்.

பொதுவாக கடவுளுக்கு ஆடு, கோழி போன்ற உயிரினங்கள் பலியிடப்படும். ஆனால், உச்ச கட்டமாக மனிதர்களே பலி கொடுக்கப்படுவதும் பண்டைய காலத்தில் வழக்கத்தில் இருந்தது. இவ்வகையான தற்பலியும் சுயவிருப்பத்தின் அடிப்படையில் யாருடைய வற்புறுத்தலும் இன்றி நடைபெறும். அதன் அடையாளமாக பலி கொடுப்பவர் தன் தலையை தானே அறுத்து பலி கொடுப்பார்.

தற்பலி கொடுத்தவரின் குடும்பத்துக்கு ஊர் மக்களும், அரசும் நிலங்களை கொடை அளிப்பது அன்றைய வழக்கமாய் இருந்தது. இவ்வாறான பலிகளுக்காக கொடுக்கப்படும் நிலங்கள் உதிரப்பட்டி நவகாணி நெய்த்தோர்பட்டி உதிரக்காணி போன்ற பெயர்களில் அழைக்கப்படுவதை தமிழகத்தின் பல கல்வெட்டுகளின் மூலம்



அறியலாம்.

இங்கு தற்பலி கொடுத்த பெண்மணி (திருநங்கை) அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய ஆடை அணிகலன்களுடன் காணப்படுகிறார். தலையில் அள்ளிமுடிந்த அழகிய கொண்டை, நெற்றிச்சுட்டி, நெற்றி பொட்டுடன் காணப்படுகிறார்.

கழுத்தில் கண்டிகை, சரப்பளி, ஆரம் ஆகிய அணிகலன்கள் உள்ளன. இரண்டு கைகளும் ஒரு நீண்ட வாளை கழுத்தின் பின்புறம் வைத்து அழுத்திய நிலையில் சிற்பம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

குறுகிய மார்பகங்களுடன் இடை முதல் தொடை வரை மட்டுமே உள்ள ஆடை அணிந்துள்ளார்.

இடையின் இரு பகுதிகளிலும் முன் பகுதியிலும் உள்ள கொசுவம் இவர் ஒரு நாட்டிய நங்கை என்பதை உறுதிப்படுத்துகிறது. எனவே, இவர் அருகில் உள்ள கொழுமம் வீர சோழீஸ்வரர் கோயில் தேவரடியாராக இருந்திருப்பார் எனக் கருதலாம். சிற்பத்திலோ அருகிலோ கல்வெட்டுகள் ஏதும் இல்லாததால் மேல் விவரங்களை அறிய இயலவில்லை.

சிற்பத்தின் வடிவமைப்பை கொண்டு இச்சிற்பம் கி.பி.12ம் நூற்றாண்டு என உறுதிப்படுத்தலாம். தற்பலி செய்த இப்பெண்மணி நாட்டிய நங்கையாக, கோயில் தேவரடியாராக மூன்றாம் பாலினத்தவராக திருவின் நங்கை எனும் பெயரில் இருந்திருப்பார் என கருதலாம்.

இந்த சிற்பத்துக்கு அருகே உள்ள குளமும் தேவரடியார் குளம் என்று அழைக்கப்படுவதால், பலி கொடுத்த இப்பெண்ணின் (திருநங்கையின்) பெயராலேயே இக்குளம் அழைக்கப்படுகிறது என்றும் கருதலாம்.பொதுவாக நவகண்டம் எனும் தற்பலி கொற்றவை தெய்வத்துக்கு முன்பே கொடுக்கப்படும். இப்பெண்மணி (திருநங்கை) எதற்காக தன்னைத் தானே பலி கொடுத்துக்கொண்டார் எனத்தெரியவில்லை.

மகாபாரதத்தில் அரவான் குருசேத்திர போர் தொடங்கும் முன்பு நவகண்டம் செய்து கொண்டதாக குறிப்பு இருக்கிறது. இவரும் தனது அரசனின் ஏதோ ஒரு போருக்காக தன்னைத்தானே பலி கொடுத்திருக்கலாம். அதை அடிஒற்றி இங்கு நவகண்டம் கொடுக்கப்பட்டதாகக்கருதலாம்.

காரணம் எதுவாக இருந்தாலும் அப்பாவியான இவரின் மரணத்தை ஏற்க மனம் மறுக்கிறது. இது தமிழகத்தில் கண்டறியப்படும் முதல் திருநங்கை நவகண்டச் சிற்பமாகும்.இவ்வாறு அவர் கூறினார்.

# ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 2 ஆயிரம் கனஅடியாக நீடிப்பு

**ஒகேனக்கல், மார்ச் 3:** கர்நாடகா காவிரி கரையோரங்களில் பெய்த மழையின் காரணமாக ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து குறைவதும் அதிகரிப்பதுமாக இருந்து வருகிறது.

இந்த நிலையில் தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து நேற்று 2 ஆயிரம் கனஅடியாக வந்தது. இன்றும் அதே அளவு தண்ணீர் நீடித்து வந்தது. இதனால் மெயின் அருவி, சினிபால்ஸ், ஐந்தருவி உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. இதனால் சுற்றுலா பயணிகள் பரிசல் பயணம் செய்து காவிரி ஆற்றின் அழகை ரசித்தனர்.

மேலும் அவர்கள் தொங்கு பாலத்தில் நின்று காவிரி



ஆற்றில் பாறைகளுக்கு நடுவே விழும் தண்ணீரை ஆர்வமுடன் ரசித்து மகிழ்ந்தனர். பின்னர் மெயின் அருவியில் குளித்தும், பெண்கள் ஆற்றில் குளித்தும் மகிழ்ந்தனர். சுற்றுலா பயணிகள் மீன் சாப்பாடு வாங்கி கொண்டு பூங்காவில் அமர்ந்து சாப்பிட்டு மகிழ்ந்தனர்.

நீர்வரத்தை தமிழக-கர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

# விடுமுறை தினத்தில் சாத்தனூர் அணையில் திரண்ட சுற்றுலா பயணிகள்

**தண்டராம்பட்டு, மார்ச் 3:** திருவண்ணாமலை மாவட்டத்தின் மிகச்சிறந்த பொழுதுபோக்கு சுற்றுலாதலமாக சாத்தனூர் அணை அமைந்திருக்கிறது. மிக பிரமாண்டமான பரப்பளவில், இயற்கை செழுமை மிக்க மலைப்பகுதியில் அமைந்துள்ள இந்த அணை பொன் விழா கண்ட சிறப்புக்குரியது. இங்கு, ஆயிரத்துக்கும் மேற்பட்ட சினிமா படப்பிடிப்புகள் நடந்துள்ளன.

எழில் நிறைந்த மலர் பூங்காக்கள், குழந்தைகளுக்கான விளையாட்டு வசதிகள், மீன் கண்காட்சி, முதலைப் பண்ணை என சுற்றுலா பயணிகளை கவரும் அம்சங்கள் நிறைந்துள்ளன.

எனவே, விழா நாட்கள் மற்றும் விடுமுறை நாட்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள், சாத்தனூர் அணைக்கு சுற்றுலா செல்வது வழக்கம்.

இந்நிலையில், நேற்று விடுமுறை காரணமாக சாத்தனூர் அணையை சுற்றி பார்க்க ஏராளமான சுற்றுலா பயணிகள் திரண்டனர். அங்குள்ள ஆதாம் ஏவாள் பூங்கா, அறிவியல் பார்க், தொங்கு பாலம், மயில் கூண்டு, முயல் கூண்டு, டைனோசர் பார்க், நீச்சல் குளம், முதலைப் பண்ணை உள்ளிட்ட இடங்களை சுற்றி பார்த்து மகிழ்ந்தனர். அதேபோல் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத்தால் சாத்தனூர் அணையில் இருந்து பிடிக்கப்படும் மீன்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

அந்த மீன்களை சுற்றுலா பயணிகள் வாங்கி அங்கேயே சமைத்து சாப்பிட்டு பொழுது கழித்தனர். மாவட்டத்தில் சிறந்த சுற்றுலாத்தலமாக விளங்கும் சாத்தனூர் அணை பொன்விழா கண்ட இந்த அணையாக திகழ்கிறது.

119 அடி உயரம் கொண்ட இந்த அணையில் விவசாய பாசனத்திற்காக திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம் ஆகிய மாவட்ட விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று சாத்தனூர் அணையில் இருந்து வினாடிக்கு வலது புறம் இடது புறம் வழியாக 550 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. இதனால் சாத்தனூர் அணை 112 அடியாக நீர்மட்டம் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# வேலூர் மாவட்டத்தில் 2 நாட்களாக நடந்த கணக்கெடுப்பில் நிலப்பரப்பில் வாழும் 110 பறவை இனங்கள் கண்டுபிடிப்பு

**வேலூர் , மார்ச் 3:** வேலூர் மாவட்டத்தில் 2 நாட்களாக நடந்த நிலப்பரப்பில் வாழும் பறவைகள் கணக்கெடுப்பில் 110 பறவை இனங்கள் இருப்பதாக வனத்துறையினர் தெரிவித்தனர்.

ஒவ்வொரு ஆண்டும் அரிய வகை பறவைகள் உட்பட அனைத்து பறவைகள், வனவிலங்குகள் கணக்கெடுக்கும் பணி வனத்துறை, தொண்டு நிறுவனங்கள், தன்னார்வலர்கள், பறவை ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பறவை இனம் கண்டறிபவர்களால் இணைந்து மேற்கொள்ளப்படுகிறது. இதில் ஈர நிலப்பகுதிகளில் வாழும் பறவைகள், இதர நிலப்பகுதிகளில் வாழும் பறவைகள் என்று 2 வகையாக கணக்கெடுப்பை நடத்துகின்றனர்.

அதன்படி, மாநிலம் முழுவதும் உள்ள வனக்கோட்டங்களில் கடந்த டிசம்பர் 27, 28ம் தேதிகளில்




ஈர நிலப்பகுதிகளில் வாழும் பறவைகள் குறித்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் நீர்நிலைகளில் வாழும் பறவைகள் கணக்கெடுப்பை நடத்தி முடித்தனர். இதற்கிடையில், கடந்த ஜனவரி 31 மற்றும் பிப்ரவரி 1ம் தேதி தமிழ்நாட்டில் முதல் முறையாக இரையாடி பறவைகள் குறித்த கணக்கெடுப்பு பணி நடந்தது.

இதில் வேலூர் மாவட்டத்தில் 92 வகையான இரையாடி பறவைகள் இருப்பது கணக்கெடுப்பில் தெரியவந்தாக வனத்துறையினர் தெரிவித்தனர். இதையடுத்து, 2ம் கட்டமாக நிலப்பரப்பில் வாழும் பறவைகள் கணக்கெடுப்பு பிப்ரவரி 14, 15ம் தேதிகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

அதன்படி, வேலூர் மாவட்டத்தில் கடந்த 14, 15ம் தேதிகளில் 25 இடங்களில் கணக்கெடுக்கும் பணி தொடங்கியது.

ஒவ்வொரு இடங்களிலும் பறவைகள் குறித்து விவரங்கள் அறிந்த தலா ஒரு ஆர்வலர்கள், சுமார் 3 வன ஊழியர்கள் என 200க்கும் மேற்பட்டோர் இப்பணியில் ஈடுபட்டனர். இந்த கணக்கெடுப்பில் வேலூர் மாவட்டத்தில் 110 பறவை இனங்கள் இருப்பதாக தெரியவந்துள்ளது.

இதுகுறித்து வேலூர் மாவட்ட வனத்துறை அதிகாரிகள் கூறுகையில், 'வேலூர் மாவட்டத்தில் கடந்த 14, 15ம் தேதிகளில் நிலப்பரப்பில் வாழும் பறவைகள் குறித்து 25 இடங்களில் கணக்கெடுப்பு பணிகள் நடந்தது. இப்பணியின் போது, வனத்துறை ஊழியர்கள், பறவை ஆராய்ச்சியாளர்கள், பறவைகள் இனம் கண்டறிபவர்கள், தொண்டு நிறுவன தன்னார்வலர்கள், காப்புக்காடு, ஊர்புறங்களில் காணும் பறவைகள் அனைத்தையும் புகைப்படம் எடுத்தும், வீடியோவாக பதிவு செய்தனர்.

தற்போது, முடிவுகள் வெளியாகி உள்ளது. அதன்படி, வேலூர் மாவட்டத்தில் 110 பறவை இனங்கள் இருப்பது தெரியவந்தது. இந்த பறவை இனங்களில் சுமார் 4,500 பறவைகள் இருப்பது தெரியவந்துள்ளது' என்றனர்.

## அரசியல் கார்னர்

# தஞ்சாவூரில் மார்ச் 4-ல் விஜய் பங்கேற்கும் தவெக கூட்டம்: காவல் துறை அனுமதி!



**தஞ்சாவூர், மார்ச் 3:** தஞ்சாவூரில் மார்ச் 4-ல் விஜய் பங்கேற்கும் தவெக நிர்வாகிகள் கூட்டத்துக்கு காவல் துறை அனுமதி வழங்கியுள்ளது.

தஞ்சாவூரில் தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் பங்கேற்கும் தவெக நிர்வாகிகள் கூட்டத்துக்கு அனுமதி கோரி அக்கட்சி நிர்வாகிகள் காவல் துறையினரிடம் மனு அளித்திருந்த நிலையில், அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள 8 சட்டப்பேரவைத் தொகுதி நிர்வாகிகளைத் தவெக தலைவர் விஜய் சந்தித்து பேச திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டி அருகே அய்யாசாமிபட்டி பிரிவு சாலை பகுதியில் 10 ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவில் மார்ச் 4-ஆம் தேதி காலை 10 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை கூட்டம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாவட்டத்திலுள்ள 8 சட்டப்பேரவைத் தொகுதிக்குள்பட்ட 4 ஆயிரத்து 900 நிர்வாகிகள் மட்டும் பங்கேற்பார்கள் என்றும் இவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு, க்யூஆர் கோடு ஸ்கேன் செய்து திடலுக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, தஞ்சை தவெக நிர்வாகிகள் கூட்டத்துக்கு அனுமதி கோரி, மாவட்டக் காவல் அலுவலகத்தில் காவல் கண்காணிப்பாளர் இரா. ராஜாராமிடம் தவெக மத்திய மாவட்டச் செயலர் ஆர். விஜய் சரவணன் உள்ளிட்டோர் மனு அளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# 'திமுகவிடம் பேரம் பேசும் கட்சி அல்ல விசிக' - தொகுதிப் பங்கீடு ஆலோசனைக்குப் பின் திருமாவளவன் பேட்டி

**சென்னை, மார்ச் 3:** "மதவாத அரசியலை வீழ்த்த திமுகவை மீண்டும் வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் பயணிப்பதால் அதற்கு ஏற்ப தொகுதிகள் கேட்கப்பட்டுள்ளது. பேச்சுவார்த்தை சுமுகமான முறையில் நடைபெற்றுள்ளது. கூட்டணியில் திமுகவிடம் பேரம் பேசும் கட்சி விசிக அல்ல. தொகுதிப் பகிர்வே அதிகார பகிர்வு தான்." என்று விடுதலை சிறுத்தை கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் கூறியுள்ளார்.

2026 சட்டப்பேரவை தேர்தலையொட்டி, திமுக தங்கள் கூட்டணி கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. அந்த வகையில், இன்று தொகுதி பங்கீடு தொடர்பாக விசிக தலைவர் திருமாவளவன் தனது கட்சியினருடன் திமுக கட்சி அலுவலகமான அறிவாயத்துக்கு வருகை தந்தார். அங்கு திமுக தேர்தல் குழுவினரை சந்தித்த அவர், தாங்கள் போட்டியிட விருப்பும் தொகுதிகளுக்கான பட்டியல் வழங்கினர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த திருமாவளவன் கூறியதாவது: 2026 சட்டப்பேரவைத் தேர்தல் சாதாரண தேர்தல் அல்ல, தமிழகத்தில் 2021-ம் ஆண்டின் சூழ்நிலையே தற்போது வரை நிலவி வருகிறது. மதவாத அரசியலை வீழ்த்த திமுகவை மீண்டும் வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் பயணிப்பதால் அதற்கு ஏற்ப தொகுதிகள் கேட்கப்பட்டுள்ளது.

எங்களுக்கான அதிகாரப் பகிர்வு குறித்து பகிர்ந்து கொண்டோம், பேச்சுவார்த்தை சுமுகமான முறையில் நடைபெற்றுள்ளது. கூட்டணியில் திமுகவிடம் பேரம் பேசும் கட்சி விசிக அல்ல. தொகுதிப் பகிர்வே அதிகார பகிர்வு தான். எந்த தொகுதி என்பது குறித்து பேச்சுவார்த்தை நடக்கவில்லை. ஆட்சியில் பங்கு கேட்கும் சூழல் இன்னும் தமிழ்நாட்டில் ஏற்படவில்லை.

புதுச்சேரியில் ஒரு தனி தொகுதி உள்பட 3 தொகுதியில் போட்டியிட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. என்னதான் பேச்சுவார்த்தையில் இழுபறி நீடித்தாலும் திமுக கூட்டணியில் தான் காங்கிரஸ் இருக்கும்." என்று திருமாவளவன் உறுதிப்பட கூறியுள்ளார்.

# அதிமுக ஆட்சி அமைய தென் மாவட்ட மக்கள் துணை நிற்பார்கள்: இபிஎஸ் நம்பிக்கை

**மதுரை, மார்ச் 3:** தேசிய ஜனநாயகக் கூட்டணி அதிக தொகுதிகளில் வெற்றிபெற்று அதிமுக ஆட்சி அமைய தென் மாவட்ட மக்கள் துணை நிற்பார்கள் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் பழனிசாமி தெரிவித்தார்.

மதுரையில் நேற்று நடைபெற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணி பொதுக் கூட்டத்தில் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி பேசியதாவது: தமிழகத்தில் உள்ள மக்கள் விரோத ஆட்சியை அகற்றவே தேசிய ஜனநாயக கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது.

எங்கள் கூட்டணியில் மக்கள் செல்வாக்குப் பெற்ற கட்சிகள் இணைந்துள்ன. எம்ஜிஆர், ஜெயலலிதாவுக்கு தென் மாவட்ட மக்கள் பக்கபலமாக இருந்தனர். எம்ஜிஆர் அதிமுகவை தொடங்கியபோது திண்டுக்கல் மக்களவைத் தேர்தலில் வெற்றியைக் கொடுத்து தென் மாவட்ட மக்கள் ஆதரித்தனர். அதுபோல், வரும் சட்டப்பேரவைத் தேர்தலிலும் அதிக தொகுதிகளில் வெற்றிபெறச் செய்து அதிமுக ஆட்சி அமைவதற்கு தென் மாவட்ட மக்கள் துணை நிற்பார்கள்.

மத்திய அரசு நிதி வழங்கவில்லை என்று முதல்வர் ஸ்டாலின் அடிக்கடி அவதூறுகளைப் பரப்புகிறார். இன்று கூட தமிழகத்துக்கு ரூ.4,500 கோடி வளர்ச்சித் திட்டங்களை மோடி தொடங்கி வைத்துள்ளார்.

குடும்ப நலன் மட்டுமே திமுக கட்சியின் நிலைப்பாடாக உள்ளது. 2ஜி ஸ்பெக்ட்ரம் முறைகேட்டில் ரூ.1 லட்சத்து 76 ஆயிரம் கோடி ஊழல் செய்தனர். சர்க்காரிய கமிஷன் அறிக்கையில் திமுக விஞ்ஞான முறையில் ஊழல் செய்ததாக குறிப்பிட்டுள்ளனர். கடந்த 5 ஆண்டு கால ஊழல் நிறைந்த திமுக ஆட்சி அகற்றப்பட வேண்டும்.

தென் மாவட்டங்களுக்கு அதிமுக ஆட்சியில் பல்வேறு திட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. 11 அரசு மருத்துவக் கல்லூரிகள் அதிமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்டன. திமுக ஆட்சியில் ஒரு மருத்துவக் கல்லூரியைக்கூட பெற முடியவில்லை.

அதிமுக ஆட்சியில் இருந்தபோதுதான் 'எய்ம்ஸ்' மருத்துவமனை திட்டம் மதுரைக்குக் கொண்டு வரப்பட்டது. தற்போது இந்த மருத்துவமனை கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அந்த மருத்துவமனையை வரவிடாமல் திமுக தடுக்க பார்த்தது. மதுரை விமான நிலைய விரிவாக்கத்துக்கு அதிமுக ஆட்சியில் 'அண்டர் பாஸ்' முறையில் முயற்சிகளைச் செய்தோம். தற்போது இந்த திட்டத்தையும் திமுக அரசு முடக்கி வைத்துள்ளது.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM